உ

சிவமயம்

# தமிழ்வேதத்தின் வித்தான
# நால்வர் நற்றமிழ்

**பாகம் - 2**



## திருநாவுக்கரசு சுவாமிகளின்
## தேவாரங்கள் தந்த அற்புதங்கள்

தொகுப்பு : இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

வெளியீடு : சைவநெறிக்கூடம்,
இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்

ஆடி, 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தமிழ் வேதத்தின் வித்தான
# நால்வர் நற்றமிழ்

## பாகம் - 02

## திருநாவுக்கரசு சுவாமிகளின்
## தேவாரங்கள் தந்த அற்புதங்கள்

இணுவையூர்
கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

வெளியீடு :
சைவநெறிக்கூடம்,
இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்வேதத்தின் வித்தான நால்வர் நற்றமிழ் பாகம் - 02**

| | | |
|---|---|---|
| தொகுப்பாசிரியர் | - | கலாபூஷணம் மூ.சிவலிங்கம் |
| பதிப்புரிமை | - | சைவநெறிக்கூடம், இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் |
| வெளியீடு | - | சைவநெறிக்கூடம், இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் |
| முதற்பதிப்பு | - | 2018 |
| நூல் வடிவமைப்பு | - | சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில். |
| நூலின் அளவு | - | A5 |
| பக்கங்கள் | - | vi + 82 |
| விலை | - | ரூபா. 200.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நற்றவன் நல்லூர்ச்சிவன் திருப்
பாதம்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற
வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன் உற்ற விடம்அடை
யார் இட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக்
கரசெனும் தூமணியே.

(நம்பியாண்டார் நம்பி)

சைவசமயம் போற்றும் சமயகுரவர் நால்வரில் ஒருவராகி தேவாரம் பாடிய முதலிகளில் முதியவராகிப் பெருமை பெற்றவர் அப்பர். தேவாரமுதலிகள் மூவர் பாடிய பாடல்கள் தேவாரம் எனப் போற்றப்பட்டாலும் திருஞானசம்பந்தரின் பாடல்கள் "திருக்கடைக் காப்பு" எனவும், சுந்தரர் பாடிய பாடல்கள் திருப்பாட்டு எனவும் வழங்கப் பெறுகிறது. திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் "தேவாரம்" என்னும் பெயரில் இன்றுவரை போற்றப்படுவது சிறப்பாகும். இவர் பாடிய பல்லாயிரம் பாடல்களில் கிடைக்கப்பெற்ற பதிகங்கள் 312 - பாடல்கள் 3065 இவையாவும் பன்னிருதிருமுறைகளுள் முறையே 4, 5, 6 என மூன்று திருமுறைகளாக வகுக்கப் பெற்றன.

சமயகுரவர்கள் நால்வருள் மூவர் வேதியர் குலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மூவரும் இளமைக் காலத்தில் பாடல்கள் பாடி 16, 18, 32 அகவையில் இறைவனுடன் கலந்தவர்கள். நாவுக் கரசரோ முதுமையில் இறைவனாற் தடுத்தாட் கொள்ளப்பட்ட வேளாண்குலத்தைச் சேர்ந்தவர். தமது 81 வயது வரை செஞ் சொற் பாமாலை பாடியும் உழவாரத் தொண்டு செய்தும் இன்புற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசரின் பாடல்களில் உவமைகளும், பழமொழி களும், அருளுபதேசங்களும், மகாமந்திரங்களும் மனித வாழ்வில் உய்யும் வகையாக ஆங்காங்கே அமைந்துள்ளன. இவரின் ஒரு பாடலில் (1058) "பவன்" என்று பல முறை சொன்னால் "சிவன்" என்னும் ஈசன் திருநாமத்தை பலகாலம் ஏத்திப் போற்றிய பயனை எம்மான் அருள்புரிவான் என அமைந்தது.

இவரைத் தடுத்தாட்கொண்டு வழங்கிய நாவுக்கரசு என்னும் திருநாமம் நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தை ஓதிப் பெறு பயனைத் தரவல்லது என்பதை இறைவன் வழங்கினார். இத்திருவைந்தெழுத்து பாடற்கடலில் வீழ்ந்தவனைத் தெப்பமாக அமைந்து கரைசேர்க்கும் என்பதை இவரின் பாடலில் அறியலாம். மூத்தோர் வார்த்தை அமிர்தம் என்பதை முதியவராம் அப்பர் பாடிய பாடல்களில் பொதிந்த அறிவுரைகள் ஏராளம்.

அப்பரின் பாடல்கள் இன்று கிடைத்துள்ள 312 பதிகங்களை யும் இன்றைய இளையோர் சமுதாயம் ஏற்காவிட்டாலும் அவர் பாடல்கள் மூலம் செய்த அற்புதங்களைச் செய்வித்த (அன்புடன் என்புருகப் பாடிய) சில பதிகங்களையாவது எம்மவர் படித்துப் பயன் பெறலாம். இன்றைய கல்வி நிலைக்கு தேவையான அற்புதங்கள் நிறைந்த பாடல்களின் சிறப்பைப் படித்து நாம் பயனடைவதுடன் நாவலர் பெருமான் காட்டிய பாதையில் சைவம் வளர எம்மாலானவற்றைச் செய்வது சிவநெறி போற்றும் ஒவ்வொருவரதும் அவசிய கடமை என உணர்வோமாக.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

**இறைபணியில்,**

**இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்


**சைவநெறிக்கூடம்**

**அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்**

DER VEREIN SAIVANERIKOODAM / CLUB DE SAIVANERIKOODAM

Verein für tamilische Religion und Kultur

L'Association de la religion et de culture tamoule

Inuvil South, Inuvil, Jaffna, Sri Lanka.




# வெளியீட்டுரை

இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் தமிழ் வேதத்தினால் பூசிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. இப்பூசையில் இடம்பெறும் அர்ச்சனை மலர்களாக அமைந்ததும் இறைவனுக்கு உகந்தது மானவை பன்னிரு திருமுறைகளாகும்.

இவற்றுள் சமயகுரவர்கள் நால்வர் பாடிய பாடல்கள் முதல் எட்டுத் திருமுறைகளையும் அலங்கரிக்கின்றன. இப்பாடல்கள் "நால்வர் பாடிய நற்றமிழ்" என அமைந்துள்ளன. இதன் முதலாம் பாகம் மழலைச்செல்வர் திருஞானசம்பந்தர் சுவாமிகளாலும் இரண்டாம் பாகம் திருநாவுக்கரசு (அப்பர்) சுவாமிகளாலும் அருளிச் செய்யப்பட்டவைகளாகும்.

பல அன்பர்களின் வேண்டுகோளுக்காக முதலாம் பாகம் "திருஞானசம்பந்தர் சுவாமிகளின் தேவாரங்கள் தந்த அற்புதங்கள்" எனவும், இரண்டாம் பாகம் "திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரங் கள் தந்த அற்புதங்கள்" எனவும் இரு நூல்களாக வெளிவருகின்றன. இணுவில் சைவநெறிக்கூடத்தின் இரண்டாவது வெளியீடான இவ்விரு நூல்களையும் இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம் அவர்கள் தொகுத்துள்ளார். மேலும் இதனை திரு.கெ.தவராசா அவர்கள் ஒப்புநோக்கியுள்ளார். இணுவில் சுடர்நிலவு கிரபிக்ஸ் நிறுவனத்தினர் இம்மலரினை நூலாக வடிவமைப்புச் செய் துள்ளனர். இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்ப துடன் இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

**சிவருசி.தர்மலிங்கம் சசிக்குமார்**
சைவநெறிக்கூடம்,
இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


முன்னுரை

வெளியீட்டுரை

1) குடும்ப வரலாறு 1

2) மருணீக்கியாரின் சமண சமயமாற்றம் 3

3) திலகவதியாரின் சிவப்பணிப்பேறு 4

4) இறைவனாற் தடுத்தாட் கொள்ளல் 5

5) திருநாவுக்கரசர் சைவப்பணி ஏற்றலும் பல்லவ மன்னனின் அழைப்பும். 10

6) சுண்ணாம்பு அறையில் அற்புதம் 13

7) நஞ்சுணவு அமுதமானது 16

8) மதயானையால் இடறச் செய்தது. 17

9) கற்றுணைபூட்டிக் கடலினுள் பாய்ச்சியது. 22

10) கல்லையே தெப்பமாகக் கரைசேர்ந்தது. 24

11) சமண சமயப் பல்லவ மன்னன் சிவனடியானாதல். 28

12) சூலமும் இடபக்குறியும் பெற்றது. 29

13) தில்லையில் தரிசனம் 31

14) அப்பர் எனும் திருநாமம் நிலைத்தல். 43

15) சத்திமுற்றத் திருத்தலத்தில் திருவடி தீட்கை வேண்டிப் பாடியது. 43

16) திருநல்லூரில் திருவடி தீட்கை பெற்றது. 45

17) அப்பூதி அடிகளின் தொடர்பும் அவர் மகனின் விடம் தீர்த்தலும். 49

18) திருவாரூரில் தரிசனம் 52

19) திருவாரூர்ச் சிறப்பை சம்பந்தருக்குத் தெரிவித்தது. 55

20) திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றது. 57

21) திருமறைக் காட்டில் மறைக்கதவு திறக்கப்பாடியது. 58

22) அப்பரை இறைவன் திருவாய்மூருக்கு அழைத்தது. 61

23) திருப்பழையாறை வடதளியில் தரிசனம். 64

24) இறைவனால் பொதிசோறு வழங்கப்பட்டமை. 64

25) இறைவன் கயிலைப் பயணத்தைத் திசைதிருப்பியது. 66

26) திருவையாறில் கயிலைக்காட்சி கண்டு தரிசித்தது. 66

27) திருப்புகலூரில் துறவுநிலையை உறுதிப்படுத்தியது. 72

28) திருநாவுக்கரசரின் இயல்பு நிலையும் முத்திப்பேறும். 76

29) நிறைவுரை 81



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு சுவாமிகளின் பாடல்களும் அற்புதங்களும்

## குடும்ப வரலாறு

பண்டு தொட்டே சைவசமயம் சிவபூமியான தமிழகத்தில் சிறப்பாகப் போற்றப்பட்டு வந்தது. பிற்காலத்திற் தோன்றிய சமணம், பௌத்தம் ஆகிய பொய்ச் சமயங்களால் நலிவடைந்த சைவசமயத்தை நிலை நிறுத்தவென்றே சிவபிரான் சித்தங் கொண்டார்.

காலத்திற்குக் காலம் இப்பணியைச் செய்யவல்ல நால்வரைத் தேர்ந்தெடுத்தார். முற்பிறவியில் முனிவராக இருந்து பக்குவநிலையின்றிச் சில தவறுகள் செய்தவர் திருநாவுக்கரசர். இறைவனின் சித்தப்படி அந்தமுனிவருக்கு முத்தியின்பம் கிடைக்கவும் தமிழ் நாட்டில் நலிவுற்ற சைவத்தை மேம்படுத்தவுமென்றே அவருக்கு மானிடப் பிறவியை வழங்கினார். காரணமின்றிக் காரியமேதும் நடைபெறாது. முனிவர் செய்த தவறின் கன்மவினையை அனுபவிக்கவும் உரிய பக்குவ நிலை வந்ததும் அவரின் பழுதில்லாத சிவபக்தியை உலகறியச் செய்யவும் முத்தியின்பத்தை வழங்கித் தமது திருவிளையாடலைப் புரிந்தார்.

இது போலவே திருநாவுக்கரசர் அவதரித்த சில சகாப்தத்தின் பின் திருஞானசம்பந்தர் அவதரித்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். இறைவன் காட்டியவாறு பிறசமயங்கள் மறையத் தமிழ் வளர்த்த சம்பந்தர் சோதியுட்கலந்தார். அதேபோல சுந்தரரும் மாணிக்கவாசகரும் இறைவனின் ஆணைப்படி தமிழகத்தில் அவதரித்து இறைபணியேற்று சைவத்தமிழுக்குப் பெருமை சேர்த்தனர். சுந்தரர் மாணிக்கவாசகரின் போதிய விபரங்களை அவர்களின் வரலாற்றில் வேறாக அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் தேர்ந்தெடுத்த இறைபணியைப் போற்றும் பெரியார்களை புண்ணிய பூமியில் வாழ்ந்த தூய பக்தர்களின் புதல்வராகவே அவதரிக்கச் செய்தார். இதனால் சைவசமயம் அகப் புறச் சான்றுகளால் மேன்மையடைந்தது. தமிழகத்தின் தலை சிறந்ததும், சிவாலயங்கள், இயல்பான மண்வளம், நீர்வளம், மக்களிடையே பக்திவளம் மிக்க திருமுனைப்பாடி நாட்டின் திருவாமூர் என்னும் திருவூர்ச் சிறப்புடையது. இத்திருவூரில் முற்றவப் பயனாகச் சிவப்பணி போற்றி இல்லற தர்மம் வழுவாது வாழ்ந்த வேளான்குலத் தம்பதியினரான சடையனார் மாதினியார் நற்பேறு பெற்றனர்.

இறைவனின் சித்தப்படி இறையருளையே போற்றி இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்த புகழனார் மாதினியார் தம்ப தியினர் தமது இனிய வாழ்வில் தலை மகளாகத் திலகவதியார் என்னும் பெண் மகவைப் பெற்றின்புற்றனர். அடுத்த சில வருடங்களில் இறையருளைவேண்டி மருணீக்கியார் அவதரித்தார். சற்குணங்களும் சிவபக்தியும் நிறைந்த பெற்றோர் தமது மழலைகளைப் பாச உணர்வுடன் வேண்டிய கல்வி, நற்பண்பு, இறைபக்தியாவற்றையும் புகட்டி நெறிப்படுத்தினர். நல்லதொரு குடும்பம் நன்னெறியும் நற்பண்பும் இங்கு நிலைத்தது. அறமும் வளர்ந்தது.

திலகவதியார் பன்னிரண்டாம் வயதானதும் (அக்காலத்து) திருமணப்பருவத்தில் இறையருள் கைகூட்ட இக்குடும்பத்திற் கமைவான குடும்ப உத்தமபுத்திரரான கலிப்பகையாருக்கு திருமணஞ் செய்ய இருபகுதியினரும் ஒரு மனதுடன் தீர்மானித்தனர். கலிப்பகையார் தமது இதரபணிகளுடன் அரச படையின் போர் வீரனாகவும் இருந்ததால் போர்க்களத்தை நாடினார். இச்சமகாலத்தில் தீராத நோயினால் பெற்றோர் இருவரும் ஒருவர் பின் ஒருவராக மறுமையெய்தினர். மாறாத கவலையுற்ற திலகவதியாரும் மருணீக்கியாரும் உறவினரால் அரவணைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்களம் புகுந்த கலிப்பகையார் போர்க்களத்தில் மாண்டார். இத்துயரச் செய்தி கேட்ட திலகவதியார் தாமும் இறக்க முன்வந்தார். இதையறிந்த மருணீக்கியாரும் இறக்க முன் வந்ததால் இருவரும் இறையருளை வேண்டி நற்பணி செய்து நல்லறம் போற்றி வாழ முன்வந்தனர். திலகவதியார் சிறப்பான ஆடைஅணிகள் யாவற்றையும் நாடாது தமதில்லத்திலிருந்து நல்லறங்கள் செய்து தவநிலையை மேற்கொண்டார். மருணீக்கியார் தமது நிலையற்ற வாழ்வையெண்ணி நிலையான அறப்பணியில் இணைந்தார். அறச்சாலைகள் தண்ணீர்ப் பந்தல்களை நிறுவி அரும்பணியாற்றினார். பயன்தருமரங்களை வளர்த்துச் சோலைகளாக்கினார். யாவரும் பயனடையும் திருக் குளங்களை வெட்டுவித்தார். தம்மை நாடி வரும் இயலாதவர்கள் ஏதிலிகளுக்கு வேண்டியன தந்து உபசரித்தார்.

## மருணீக்கியாரின் மத மாற்றம்

மருணீக்கியார் தாம் கற்ற கல்வியில் கொல்லாமையை முதன்மைப்படுத்தும் சமண சமயத்தை நாடினார். இறைவன் இவருக்கான தண்டனையாகவே இவர் சமணப்படுகுழியில் வீழ்ந்தார். இவரின் முன் செய்த தவறின் தண்டனையை சமணப் பாசறையில் நீடிய காலம் அனுபவிக்க நேர்ந்தது.

மருணீக்கியாரின் சிந்தனைப்படி தமக்கண்மையிலுள்ள பாடலி புத்திரம் என்னும் சமணப் பள்ளியில் இணைந்தார். சமண குருமார் இவரின் ஆர்வம் திறமை ஆகியவற்றிற்கமையச் சிறந்த போதனைப் பயிற்சியை வழங்கினார். இவரின் திறமையும் மதியூகமும் சிறப்படைந்ததால் தருமசேனர் என்னும் பெயருடன் தமது தலைமைப் பதவியையும் கொடுத்துப் பெருமைப் படுத் தினர். தருமசேனர் என்னும் பெயருடன் ஐம்பது வருடங்கள் வரை சமணநெறியில் தம் வாழ்நாளை இழந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலகவதியாரின் சிவப்பணிப்பேறு

திலகவதியார் இதே காலத்தில் தமது ஒரே தம்பி பிறமதத்தில் ஒட்டியதால் தமது வீட்டிலிருந்து சகல உறவுகளையும் விட்டு நீங்கி திருவதிகை வீரட்டானேசுரர் ஆலயப் பணி செய்து தமது எதிர்கால நன்மைக்காகச் சிவப்பணியை மேற்கொண்டார். சிவ சின்னங்களணிந்து அவ்வாலயத் திருமடத்தில் தங்கியிருந்து ஆலயப்பணிகளைச் சிறப்பித்தார். அதிகாலையில் துயிலெழுந்து நல்லறம் நாடி ஆலயத்தை உள்ளும் புறமும் கூட்டிப் பெருக்கியும் பசுஞ்சாணி கொண்டு ஆலய மண்டபத்தை மெழுக்கிட்டும் வந்தார். பின் தமது ஆசாரம் பேணி நன்னீராடியதும் நந்த வனத்தில் நறுமலர்கொய்து நல்ல அழகான மாலைகள் தொடுத்து இறைவனை அலங்கரிக்க உதவினார். பூசை வேளையில் தலை யாரக் கும்பிட்டுத் தனது தூய பக்தியை அணிசெய்தார்.

இறையருளின் தூய சிந்தனை அனைவரதும் உள்ளங் களிலும் ஒருமனதாகவே தோன்றும் உதாரணமாகத் திலகவதியார் செய்ததொண்டின் நியதியைத் திருநாவுக்கரசர் பிற்காலத்திற் பாடியபாட்டின் மூலம் அறியலாம்.

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்**
**புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்**
**தலையாரக் கும்பிட்டு.....**

என்று தொடர்வதை அறிந்தோம்.

இவ்வாறு இறைபணியையே இடையறாது தமது இதயத் துடிப்புடன் நாளாந்தம் செய்த திலகவதியார் முதுமைப் பருவத்தை அடைந்தார். மனிதவாழ்வில் நிலையாமையை உணர்ந்தார். சிவபணியின் பேரின்பத்தில் தமது தம்பியையும் இணைத்தால் இருவரும் முத்தியின்பம் பெறலாம் என அவாவுற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடிய காலம் இறைபணியாற்றியவர் தமது வேண்டுதலை நல்குமாறு இறைவனிடம் வேண்டினார். தமது தம்பியை சிவப் பணியில் இணைக்குமாறு கேட்ட வேண்டுதலுக்காக அன்று அசரீரி வார்த்தை ஒன்று உரைத்ததைத் திலகவதியார் அவதானித்தார். "உன் மனக்கவலையை ஒழிப்பாயாக! உன் தம்பி முற்பிறவியில் ஒரு முனிவனாக இருந்து என்னை அடையத் தவஞ் செய்தான். இனி அவனுக்கு சூலை நோயைத் தந்து அதன் மூலம் அவனைத் தடுத்தாட்கொள்வோம்" என்றதும் மேற்கூறிய அசரீரி மறைந்தது.

## இறைவன் தடுத்தாட் கொள்ளுதல்

இறைவனின் சித்தப்படி தருமசேனரை கொடிய சூலை நோய் தழுவியதால் தாங்கொணாத வேதனையில் துவண்டார். சமணர் கள் தமது மந்திர தந்திரங்களை உபயோகித்தும் பயனேதுமற்ற நிலையில் அகன்றனர். நோயின் வெம்மை தாங்க முடியாத தரும சேனர் தமது சமையற்காரர் மூலம் திலகவதியாரிடம் தெரிவித்தார். திலகவதியார் தாம் சமண பள்ளிக்கு வரமுடியாதெனக் கூறியதால் அவர் தாமாகவே தாங்கமுடியாத சூலை நோயுடன் வந்து திலகவதி யாரின் காலில் வீழ்ந்து வணங்கினார். அச்சமயம் அவர் தம்பிக்குத் திருநீறிட்டு எம்பெருமானின் சந்நிதிக்கு அழைத்துச் சென்றார். சிவனருள் நோயின் தாக்கத்தை நலிவடையச் செய்தது. இருவரும் திருவதிகை வீரட்டனேச்சுரரின் ஆலயத்துட் சென்றனர்.

திலகவதியாரின் சித்தப்படி தம்பியுடன் இறைவனை வணங்க வந்தவர்களை இறையருள் தடுத்தாட் கொண்டது. சிவ சிந்தனை ஊற்றெனப்பாய தருமசேனரான மருணீக்கியார் தமது முதுமைப் பருவத்தே அடியற்ற மரம் போல ஆலயத்தின் முன் வீழ்ந்தார். அவரின் சூலைநோய் படிப்படியாக விலகுவதை உணர்ந்தார். அவரின் முற்றவ ஞானமும் சமகால சிவபக்தியும் மேவ அவர் இறைவனிடம் தம்மை அர்ப்பணித்தார். இறையருள் அவரை அருந்தமிழில் பாடவைத்தது. நிலத்தில் வீழ்ந்து வணங்கியதும் சிவஞான சித்தியால் உள்ளமுருகப் பாமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைந்தார். இவர் தமது சிவபக்தி தந்த பரிசாக சிந்தையுட்புகுந்த இறைவனை வேண்டிப் பாடிய முதற்பாடல் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்..." இவரின் பாடல் பதிகம் நிறைவு பெற்றதும் இவரின் கொடிய சூலை நோய் முற்றாக மாறியது. "அடியேனை உயிர் தந்து அருள் புரிந்தார்" என இறைவனை புகழ்ந்த மருண்நீக்கியார் சிவ சிந்தனை மேலிட உளம் பூரித்து இறைவனின் கருணைக் கடலில் மூழ்கினார். மீண்டும் பலமுறை நிலத்தில் வீழ்ந்து புரண்டு புரண்டு வணங்கித் துதித்தெழுந்தார்.

எழுந்ததும் தன்வினைப் பயனாக பொய்யான சமண சமயத்தில் மூழ்கியதால் கொடிய சூலை நோயைத் தந்து உன் திருவடிகளை வணங்க வைத்தாய். இதற்காக என்ன கைமாறு செய்வேன் என்று மனமுருகினார். அப்பொழுது வானவெளியில் "நீ மொழிக்கு மொழி தித்திக்கும் தீந்தமிழில் திருப்பதிகப் பாமாலை யைப் பாடினாய்! அதனால் "நாவுக்கரசு" என்ற பெயர் உனக்கு ஏழுலகங்களிலும் நயப்புற வழங்குவதாக" என்று அசரீரி ஒலித்தது. யாவரும் இறையருளின் வாக்கையும் நாவுக்கரசரையும் வாயாரப் புகழ்ந்தனர். மருண்நீக்கியார் திருநாவுக்கரசரானார். தாம் செய்த கன்மவினையின் பாவம் தீர இறைவனின் ஆலயங்கள் தோறுஞ் சென்று துதித்துப் பாடவும் உளவாரத் தொண்டு செய்யவும் சித்தங் கொண்டார்.

திருநாவுக்கரசர் பாடிய முற்பாடலான பதிகம் திருவாதிகை வீரட்டானேசுரர் திருப்பதியில் பாடப்பெற்றதும் பன்னிருதிருமுறை களில் நாலாவது திருமுறையில் முதலாம் பதிகமாக அமைந்தது. முதற் பதிகத்தை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

நாலாந்திருமுறை பண் : கொல்லி

1. கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே!

2. நெஞ்சம் உமக் கேஇட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

3. பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றம் ஏற்றுகந் தீர்சுற்றும் வெண்டலை கொண்டு
அணிந்தீர் அடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முன்னம்அடி யேன்அறி யாமையினால்
முனிந்து என்னை நலிந்து முடக்கியிடப்
பின்னைஅடி யேன்உ மக்கு ஆளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னை அடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர்தம் கடன் ஆவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

5. காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய் கயம்புக நூக்கியிட
நிலைக் கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

6. சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம் நீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலை யில்பலி கொண்டு உழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

7. உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர் தலை காவல் இலாமை யினால்
லயந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்தே என் வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திடநான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடிய
வீரட்டா னத்துறை அம்மானே.

8. வலித்தேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம் மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாரும் இல்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன் அடியேன் அதி கைக்கெடில
வீரட்டா னதுறை அம்மானே.

9. பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்பொலியும் பிறையீர்
துன்பே கவ லைபிணி என்று இவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும் இடர்
என்போலிகள் உம்மை இனித் தெளியார்
அடியார் படுவது இதுவே யாகில்
அன்பே அமையும் அதி கைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

10. போர்த்தாய் அங்கொர் ஆனையின் ஈருரிதோல்
புறங்காடு அரங்காநடம் ஆடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என் வேதனையான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசர் பாடல் பணி ஏற்றதும் பல்லவ மன்னனின் அழைப்பும்

திருநாவுக்கரசர் வீரட்டானேசரின் திருவருளால் சூலை நோயி லிருந்து பூரணமாக விடுபட்டுச் சைவப்பணியாற்றும் தகவல் பாடலிபுரத்துச் சமணர்களுக்கு எட்டியது. இதனால் தமது சமயம் அழிந்து விடுமென்றும் அரசன் தம்மை வெறுப்பானென்றும் சமணர் உணர்ந்தனர். தாமே பல்லவ மன்னனிடஞ் சென்று தருமசேனர் தமக்குச் சூலை நோய் கண்டதாக நடித்துச் சென்று சைவ சமயத்தில் சேர்ந்துள்ளார். இதனால் எமது சமணம் அழியப்போகிறதெனப் பாசாங்கு செய்து அரசனுக்கு வெறுப்பை ஏற்படுத்தினர்.

இதனாற் சினமுற்ற மன்னன் தருமசேனரை அழைத்து வருமாறு மந்திரிமாருக்குக் கட்டளையிட்டான். மந்திரிகள் திருநாவுக்கரசரிடஞ் சென்று அரசனின் கட்டளைப்படி உம்மை அழைத்துச் செல்ல இருக்கிறோம் என்று கூறினர். இதைக் கேட்டதும் சிவநெறி போற்றும் திருநாவுக்கரசர் தமது பதிலைப் பின்வரும் பாடல் மூலம் வெளிப்படுத்தினார். பாடிய திருப்பதிகம் இதுவாகும்.

ஆறாந்திருமுறை - பதிக எண் : 98

1. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்சே வடியிணையே குறுகினோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அகவிடமே இடமாக ஊர்கள் தோறும்
அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்
புகவிடமாம் அம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்றுமெய்யே
இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டான்
இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும்
சொற்கேட்கக் கடவாமோ துரிசற்றோமே.

3. வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்
மாதேவா மாதேவா என்று வாழ்த்தி
நீராண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம்
நீறணியும் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாய் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணி கேட்கக் கடவோமோ பற்றற் றோமே

4. உறவாவார் உருத்திரபல் கணத்தி னோர்கள்
உடுப்பனகோ வணத்தோடுநீ ளுளவா மன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானும்
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்வோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யச் சொல்ல வல்லோம் நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற்றோமே.

5. என்றும் நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இரு நிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறு தெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே.

6. மூவுருவின் முதலுருவாய் இருநாள் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்துமூவர்
தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்தும்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாதரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவ மலோம் கடுமையொடு களவற் றோமே.

7. நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமாய் அருமை யாகி
அன்புடையார்க் கெளிமையதாய் அளக்கலாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மையோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமே பிழையற் றோமே.

8. ஈசனையெவ் வுலகினுக்கும் இறைவன் தன்னை
இமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ் செய்கின்ற
நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்
நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லாம் மறந்தோ மன்றே
வந்தீரார் மன்னவனா வான்றானாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி
விடையுடையான் வேங்கை அதன் மேலாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மான்தோல் சார்ந்த
உடையுடையான் நம்மையுடையான் கண்டீர்
உம்மோடு மற்றுமுளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோமல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே.

10. நாவார் நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவா என்றெமையாள்வான் அமரர் நாதன்
அயனொடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் தென்திசைக்கோள் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலும்
குணமாகக் கொள்ளோம் எண் குணத்துள்ளோமே.

"திருச்சிற்றம்பலம்"

## சுண்ணாம்பு அறையில் அற்புதம்

மேற்கூறிய "நாமார்க்கும் குடியல்லோம்" என நாவுக்கரசர் பாடி மறுத்ததும் மந்திரிமார் அரச கட்டளைப்படி நாம் அழைத்துச் செல்லாது விடில் அரசன் தம்மைத்தான் தண்டிப்பாரென்று கூறிப் பணிந்தனர். அவர்கள் மீதிரங்கிய நாவுக்கரசர் இனி வரப்போகும் எல்லா வினைகளுக்கும் எம்பிரான் துணை நிற்பார் எனக் கூறிக் கொண்டு அரசனிடஞ் சென்றார். நாவுக்கரசரைக் கண்டதும் சினங்கொண்ட மன்னன் சமண குருமாரின் வேண்டுதலுக்கமையச் சுண்ணாம்புக்காள வாயிலுள் நாவுக்கரசரை விட்டு அடைக்குமாறு பணித்தான். ஏவலாளர்கள் தம் பணியை நிறைவேற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீற்றறையுட் சென்ற நாவுக்கரசர் தில்லைக்கூத்தனின் நிழலைத் தலைமேற்கொண்டு "ஈசனடியார்க்கு ஈண்டுவரும் துயருண்டோ?" என எண்ணியவாறு இறைவனைத் தொழுத வண்ணமிருந்தார். அதிகூடிய வெப்பமுடைய அந்த நீற்றறை இளவேனிற் பருவகால நிழல்தரும் குளிர்ச்சியான நறுமலர்ப் பொய்கையின் எழில் தோன்றியது. இறைவனின் திருவடி நிழலை எண்ணிய நாவுக்கரசர் பின்வரும் பதிகம் பாடினார்.

ஐந்தாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

1. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

2. நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

3. ஆளா காரஆளானாரை அடைந்து உய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யோதொழும்பர் செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே

4. நடலை வாழ்வுகொண்டு என்செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமுது உண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே.

6. குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே

7. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையேன் நெடுங் காலமே.

8. எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின்றே னையும் சூழ்ந்துகொண்டு
உழுத சால்வழி யேஉழுவான் பொருட்டு
இழுத நெஞ்சம் இதுஎன்படு கின்றது.

9. நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும்நீரும் கொண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே

10. விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய "மாசில்வீணையும்" என்னும் பதிகத்தைப் பாடியதும் ஒரு வாரம் வரையும் நீற்றறை குளிர்ச்சியுடன் அமைந்த தால் எதுவித வேறுபாடுமின்றிக் காணப்பட்டார். அரசனின் ஆணைப்படி சுண்ணாம் பறையைத் திறந்த சமணர் கூட்டம் இறைவனடியை எண்ணித் தமது பேரானந்தத்தை வியந்த நாவுக்கரசரைக் கண்டு விசனமுற்றனர்.

## நஞ்சுணவு அமுதமானது

மன்னனிடஞ் சென்று இவன் முன்னர் எங்கள் மதத்தின் மந்திர சக்தியால் சாகாமல் தப்பினான். இவனை உயிரோடு விட்டால் பல தீமை கள் செய்வான். இவனை நஞ்சூட்டிக் கொல்ல வேண்டுமென்றனர். நாவுக்கரசருக்கு நஞ்சு கலந்த பாற்சோற்றை உணவாக வழங்குமாறு அரசன் பணித்தான். ஏவலாளர்கள் தண்டனையை வழங்கினர்.

அச்சமயம் "நஞ்சும் அமுதாகும் எங்கள் நாதன் அடி யார்க்கே" என்று சொல்லிச் சிரித்துவிட்டு அவர்கள் வழங்கிய நஞ்சு கலந்த உணவை வாங்கி உண்டார். முன்னொரு சமயம் பாற் கடலில் தோன்றிய நஞ்சை வாரியுண்ட எம்பெருமான் அமுதத்தை யுண்ட நிலையில் நாவுக்கரசரும் எதுவித தீங்குமின்றிக் காணப் பட்டார். இறைவனின் திருவடியை எண்ணிப் பாடிய திருப்பதிகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

**"துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறக்கும் இராதே**
**அஞ்செழுத்தோதி நாளும் அரனடிக்கு அன்பு அதாகும்**
**வஞ்சனைப் பாற்சோறு ஆக்கி வழக்கிலா அமணர் தந்த**
**நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே"**

(இப்பாடல் நாலாந்திருமுறை)

நஞ்சு கலந்த உணவை உண்டும் சாகாதிருந்ததைக் கண்டு பயந்த சமணர்கள் இவன் நஞ்சையும் அமுதாக ஏற்றான். இவனை மேலும் உயிருடன் விடலாகாது. அரசனிடம் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணர்கள் இவன் எமது சமய மந்திர தந்திரங்களை நன்கு கற்ற சித்தியால் யாவற்றையும் சாதனையால் வெல்கிறான். இவனை எமது மதங்கொண்ட பட்டத்து யானையை ஏவிக் கொல்லச் செய்ய வேண்டுமென மன்னனிடம் நயம்பட உரைத்தனர்.

## மதயானையால் இடறச் செய்தல்

கொடிய சமணர்களின் சொற்கேட்ட மதிகெட்ட மன்னன் மத யானையை ஏவிவிட்டுக் கொல்லுமாறு பணித்தான். ஏவலாளர் "கோபாதிசயம்" என்னும் மதங்கொண்ட பட்டத்து யானையைக் கட்டவிழ்த்துவிட்டனர். அந்த யானை பயங்கரத் தோற்றத்துடன் எதிரில் வந்தவர்களுக்குத் தீங்கிழைத்த வண்ணம் மூர்க்கமாக ஓடி வந்தது.

யானைப் பாகர்கள் நாவுக்கரசர் மீது யானையை ஏவினர். அச் சமயம் நாவுக்கரசர் விடைமீதமரும் சிவபெருமானைத் தியானித்து நின்ற வாறு பின்வரும் பதிகத்தைப் பாடினார்.

நாலாந்திருமுறை திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

1. "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ணவுரிவை உடையும்
வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண்முரணேறும்
அகவம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பூண்டதோர் கேழல் எயிறும்
பொன்திகழ் ஆமை புரள
நீண்டதிண் தோள்வலம் சூழ்ந்து
நிலாக்கதிர் போலவெண் ணூலும்
காண்தரு புள்ளின் சிறகும்
கலந்த கட்டங்கங் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

3. ஒத்த வடத்தின் நாகம்
உருத்திர பட்டம் இரண்டும்
முத்து வடக்கண் டிகையும்
முளைத்தெழு மூலிலை வேலும்
சித்த வடமும் அதிகைச்
சேணுயர் வீரட்டம் சூழ்ந்து
தத்தும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

4. மடமான் மறிபொற் கலையும்
மழுப்பாம்பு ஒருகையில் வீணை
குடமால் வரைய திண் தோளும்
குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமால் தழுவிய பாகம்
இரு நிலன் ஏற்ற சுவடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடமார் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

5. பலபல காமத்த ராகிப்
பதைத்தெழு வார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும்
கணபதி என்னும் களிறும்
வலமேந்து இரண்டு சுடரும்
வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

6. கரந்தன கொள்ளி விளக்கும்
கரங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும்
பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாளர்
அறியப் படாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கொலைவரி வேங்கை யதளும்
குவவோடு இலங்குபொன் தோடும்
விலைபெறு சங்கக் குழையும்
விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பும்
மணியார்ந்து இலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

8. ஆடல் புரிந்த நிலையும்
அரையில் அசைந்த அரவும்
பாடல் பயின்றபல் பூதம்
பல்லா யிரங்கொள் கருவி
நாடற்கு அரியதொர் கூத்தும்
நன்குயர் வீரட்டம் சூழ்ந்து
ஓடும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

9. சூழும் அரவத் துகிலும்
துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவள் அஞ்ச
அஞ்சாது அருவரை போன்ற
வேழம் உரித்த நிலையும்
விரிபொழில் வீரட்டம்சூழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழும் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

10. நரம்பெழு கைகள் பிடித்து
நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாம்கொண்டு எடுத்தான்
ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்
வளர்பொழில் வீரட்டம் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

திருச்சிற்றம்பலம்

மேற்கூறிய "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்னும் பதிகத்தைப் பாடியதும் யானையை உற்று நோக்கிய வண்ணம் "வெஞ்சுடர் மூவிலைச் சூலவிரட்டர் தம் அடியோம் நாம் அஞ்சுவதில்லை" என்று கூறி இறை அன்பில் உறைந்து நின்றார். நாவுக்கரசரின் அன்பு நிலையைக் கண்ட மதயானை அவரை வலம் வந்து வணங்கிப் பணிந்து எழுந்தது. பின்னாற் சென்று தம்மை மீண்டும் கொல்ல ஏவிய பாகனை வீசிக் கொன்றது. பின்னர் அங்கு கூடி நின்ற சமணர்களை விரட்டிக் கொன்றது. யாவரும் பயந்து தறிகெட்டோடி மறைந்தனர். யானை நக ரெங்கும் ஓடி உலாவி யாவரையும் திகிலடையச் செய்தது. அரசன் பெருங் கவலையில் ஆழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றுணை பூட்டிக் கடலினுள் பாய்ச்சுதல்

சிதறி ஓடிய சமணர்கள் சினங்கொண்ட அரசனின் தாளில் வீழ்ந்து வணங்கி சமண சமயத்திற்கு வந்த கேட்டை நீக்க இவனைப் பாறாங் கல்லுடன் கட்டிக் கடலில் வீழ்த்துவதே சிறந்ததெனப் பரிந்துரைத்தனர். இதனைக் கேட்ட கொடிய மன்னன் நாவுக்கரசரைக் கருக்கல்லில் கயிற்றால் கட்டிச் சென்று கடலில் வீழ்த்துமாறு பணித்தான். ஏவலாளர்களும் அரச கட்டளையை நிறைவேற்றினர். கருங்கல்லின் மீது கயிற்றால் கட்டிய வண்ணம் படகில் ஏற்றிக் கடலில் தள்ளிவிட்ட கொலை காரரும் சமணர்களும் வேடிக்கை பார்த்தனர். ஆழ்கடலில் வீழ்ந்த நாவுக்கரசர் சித்தத்தைச் சிவன் பால் வைத்து "எப்பரிசாயினும் ஆகுக. எந்தையே! ஏற்றிப் புகழ்வேன்" எனக் கூறினார். திருவைந்தெழுத்தை ஓதிவிட்டு நமசிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார்.

பதிகம் நாலாந் திருமுறை பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

1. **சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணையாவது நமச்சி வாயவே.**

2. **பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை**
**ஆவனுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்**
**கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது**
**நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.**

3. **விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்**
**உண்ணிய புகில்அவை யொன்று மில்லையாம்**
**பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை**
**நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இடுக்கண்பட் டிருக்கினு மிரந்து யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே.

5. வெந்த நீறருங்கலம் விரதிகட் கெல்லாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீள்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

6. சலமிலன்சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில நாடொறு நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

7. வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே

8. இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

9. முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேச ரணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெல்லாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே"

"திருச்சிற்றம்பலம்"

## கல்லையே தெப்பமாகக் கரை சேர்ந்தது

திருநாவுக்கரசர் நமச்சிவாயப் பதிகத்தை உளமாரத் துதித்த வண்ணம் பாடியதும் இறைவனின் பேரருள் அவரைப் பிணைத்துக் கட்டிய கல்லானது தெப்பமாக மிதந்தது. இறைவனின் உணர்த்துதலால் வாயு பகவானின் வலிமை கல்லான தெப்பத்தை வேகமாக நகர்த்தியது. அவரைக் கட்டியிருந்த கயிறும் அறுந்தது. நாவுக்கரசர் தமது முன்வினைப் பயனாக சைவ சமயத்தை விட்டுச் சமண சமயத்திற்கு மாறியதும் கன்மவினை மாயையால் கட்டுண்டு இருளில் மூழ்கியவர். நமச்சிவாயப் பதிகம் பாடியதும் அவரின் சமணத்தின் பாசவலையான கல்லிற் கட்டிய கயிறும் அறுந்து விலகியது. அச்சமயம் சிவப்பொலிவு பிரகாசிக்க இதயசுத்தியுடன் கல்லான தெப்பம் மீதமர்ந்து இறையருளின் கருணையால் அயற் றிருவூரான திருப்பாதிரிப்புலியூரின் கரையில் சேர்ந்தார்.

திருநாவுக்கரசர் சமணர்களின் பல கொடுமைகளான கடும் சோதனைகளையெல்லாம் சிவபெருமானின் திருவடியை எண் ணிப் பாமாலை சூடிப் பெறும் பேறான சித்திகளைப் பெற்றார். இறுதியாக ஆணவம் என்னும் கல்லில் மாயையென்னும் கயிற்றாற் கட்டி முன் செய்த கன்ம வினை கட்டப்பட்டவாறு கடலில் விடப் பட்டார். இறைவனைப் பாடிய திருவைந்தெழுத்து வேதம் நான்கினும் மெய்ப் பொருளான நமச்சிவாய என்னும் நாதனின் திருவருட் பேறால் மும்மலங்களிலிருந்து விடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பட்ட துன்பங்களிலிருந்து விடுபட்டதும் தாம் கரை சேர்ந்த துறையான திருப்பாதிரிப்புலியூரில் சைவப் பெருமக்கள் கடல் போல் சூழ வந்து இறை நாமங்களைச் சொல்லி ஆரவாரத்துடன் வரவேற்றனர். நாவுக்கரசர் யாவரையும் வணங்கிய வாறு அயலிலுள்ள சிவாலயத்தை அடைந்தார். சிவனடியார்களும் புடைசூழ்ந்து நிற்க அவர் இறைவன் சந்நிதியில் பலமுறை வீழ்ந்து வணங்கினார். இறையருளை வியந்து "ஈன்றாளுமாய் எனக் கெந்தையாய்" என்ற தொடரில் பாமாலைப் பதிகம் பாடினார். பாடிய வண்ணம் ஆலயத்தை வலம் வந்து அவ்விடத்தில் தமக்கு மனநிறைவையும் தந்த இறைவனின் ஆலயச் சூழலில் சில நாட்கள் தங்கியிருந்து சிவனடியார்களுடன் இறையருளை வியந் தார். திருப்பாதிரிப்புலியூரில் திருநாவுக்கரசர் பாடிய பதிகத்தை அறிவோம்.

4ஆம் திருமுறை திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

1. ஈன்றாளுமாய் எனக்கு எந்தையு
மாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்து உகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன்
தன்னடி யோங்களுக்கே.

2. பற்றாய் நினைந்திடப் போது நெஞ்
சேஇந்தப் பாரை முற்றும்
சுற்றா யலைகடல் மூடினும்
கண்டேன் புகனமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றான் உமையவட்கு அன்பன்
திருப்பா திரிப்புலியூர்
முற்றா முளைமதிக் கண்ணியி
னான்றன் மொய்கழலே.

3. விடையான் விரும்பியென் உள்ளத்து
இருந்தான் இனிநமக்கு இங்கு
அடையா அவலம் அருவினை
சாரா நமனை அஞ்சோம்
புடையார் கமலத்து அயன்போல்
பவர்பா திரிப்புலியூர்
உடையான் அடியான் அடிஅடி
யோங் கட்கு அரியதுண்டே.

4. மாயமெல் லாம்முற்ற விட்டிருள்
நீங்க மலை மகட்கே
நேய நிலாவ இருந்தான்
அவன்றன் திருவடிக்கே
தேயமெல் லாநின்று இறைஞ்சும்
திருப்பா திரிப்புலியூர்
மேயநல் லான்மலர்ப் பாதம்என்
சிந்தையுள் நின்றனவே"

5. வைத்த பொருள் நமக்கு ஆம் என்று
சொல்லி மனத்தடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவாய
நமவென்று இருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வார்
அவர்பா திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ
அறிவிலாப் பேதை நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கருவாய்க் கிடந்துன் கழலே
நினையும் கருத்துடை யேன்
உருவாய்த் தெரிந்து உன்றன் நாமம்
பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா
திரிப்புலி யூர் அரனே.

7. எண்ணாது அமரர் இரக்கப்
பரவையுள் நஞ்சையுண்டாய்
திண்ணார் அசுரர் திரிபுரம்
தீயெழச் செற்றவனே
பண்ணார்ந்து அமைந்த பொருள்கள்
பயில்பா திரிப்புலியூர்க்
கண்ணார் நுதலாய் கழல்நம்
கருத்தில் உடையவனே.

8. புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என் மனத்தே
வழுவாது இருக்க வரந்தர
வேண்டும் இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல் வைத்த தீவண்ணனே.

9. மண்பாத லம்புக்கு மால்கடல்
மூடிமற்று ஏழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர்
வீழினும் அஞ்சல் நெஞ்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்பால் நமக்கொன்று கண்டோம்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே

10. திருந்தா அமணர்தம் தீநெறிப்
பட்டுத் திகைத்து முத்தி
தருந்தாள் இணைக்கே சரணம்
புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா அரக்கன் உடல் நெரித்
தாய்பா திரிப்புலியூர்
இருந்தாய் அடியேன் இனிப்பிற
வாமல் வந்து ஏன்று கொள்ளே

"திருச்சிற்றம்பலம்"

## சமண சமயப் பல்லவ மன்னன் சிவனடியானாதல்

திருப்பாதிரிபுலியூரிலிருந்தே தம்மைத் தடுத்தாட்கொண்டு உய்வித்தருளிய திருவதிகை வீரட்டானேசுரரை எண்ணி வந்து தரிசித்தார். நாவுக்கரசர் சமணர்களின் கொடிய சோதனைகளை இறைவனின் அருளாசியால் தமது திருவாக்கான பாடலினால் சித்தி பெற்றதை மெச்சி "வாக்கீசர்", "பைந்தமிழ்ப் பாவலர்", "மொழியின் காவலர்" என்று பலவாறு புகழ்ந்து போற்றிய அவ்வூர்ச் சிவனடியார்கள் பெருமதிப்பளித்தனர். பொது மக்களின் பக்தியும் பெருமதிப்பும் பேரன்பும் திரு அலங்காரப் பவனியும் கூடிய அகமகிழ்வுடன் வீரட்டானேசுவரரை நன்கு வழிபட்டு இறையருள் மேவ "வெறிவிரவு கூவின நற்றெங்கலானை" என்னும் பல்லவி அமைந்தது. ஏழைத் திருத்தாண்டகப் பதிகத்தைப் பாடினார். தொடர்ந்து சில காலம் அங்கிருந்து உழவாரத் தொண்டு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமகாலத்தில் சமணர்களின் தூண்டுதலால் தனது மதி யிழந்து சைவப்பெருந்தகை திருநாவுக்கரசருக்குப் பல கொடுந் தண்டனை விதித்த பல்லவ மன்னன் சிவநெறியின் உண்மையை யுணர்ந்து தமது தெளிந்த நிதான புத்தியுடன் திருவதிகை வந்தடைந்தான். நாவுக்கரசரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தனது பாவச் செயலை யிட்டு மன்னிப்புக் கோரித் திருநீறணிந்து சிவனடியானாக விளங்கினான். தமது பாடலிபுத்திரம் சென்று சமணர்கள் யாவரையும் ஏற்கெனவே தொலைத்ததால் சமணப் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்தழித்தான். அதன் மூலப் பொருட்களைத் திருவதிகைக்குக் கொண்டு வந்து "குணபரவீச் சரம்" என்னும் சிவாலயத்தைக் கட்டுவித்தான். சமணர்கள் அழியவும் உதவிய மன்னன் திருநீறு துலங்கச் சிவபக்தனானான்.

## சூலக்குறியும் இடபக்குறியும் பெற்றது

திருநாவுக்கரசர் தொடர்ந்து பெண்ணாகடத்திலுள்ள திருத் தூங்கான மடத்திலுள்ள இறைவனைத் தரிசித்து "சமண சமயத்தின் தொடக்கு (ஆசூசம்) படிந்த இத்திருவுடலுடன் நான் உயிர் வாழ மாட்டேன். இவ்வுடலைத் தரித்து வாழ இறைவனே முத்திரை இடல் வேண்டும் எனப் பணிந்தார். இறைவன் மீது அன்பு மேலிட "பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" என்ற தொடரில் திருவிருத்தம் பாடினார். இறையருளால் வேறெவரும் காணாதவாறு திருநாவுக்கரசரின் திருத்தோளில் "சூலக்குறியும் இடபக் குறியையும்" ஒரு பூதம் வந்து பொறித்தது. இதைக் கண்டதும் நாவுக்கரசர் இறைவனை வியந்து வணங்கி வீழ்ந் தெழுந்து "உய்ந்தெழுந்தேன்" என்று கூறி இன்புற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

1. பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்
டேல் இருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலம் என்
மேற்பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
மாடச் சுடர்க் கொழுந்தே

2. ஆவா சிறுத்தொண்டன் என்நினைந்
தான் என்று அரும்பிணி நோய்
காவா தொழியிற் கலக்குமுன்
மேற்பழி காதல்செய்வார்
தேவா திருவடி நீறென்னைப்
பூசுசெந் தாமரையின்
பூவார் கடந்தையுள் தூங்கானை
மாடத்து எம் புண்ணியனே

3. கடவுந் திகிரி கடவாது
ஒழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிரல் ஒன்றுவைத்
தாய்பனி மால்வரை போல்
இடவம் பொறித்து என்னை யேன்றுகொள்
ளாய்இருஞ் சோலை திங்கள்
தடவும் கடந்தையுள் தூங்கானை
மாடத்து எம் தத்துவனே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லையிற் தரிசனம்

அப்பர் பெருமான் பெண்ணாகடம் என்னும் திருவூரின் திருத்தலமான திருத்தூங்கானை மாடத்தில் இறைவனை வணங்கித் தமக்குச் சமணரின் பாவத்தொடக்கு நீக்குமாறு வேண்டிப் பாடிய பின் தில்லையில் அம்பலக்கூத்தனைத் தரிசிக்க வந்தார். தில்லையில் திருநடனம் புரியும் பிரானைத் தமது உளமார வணங்கினார். அம்பலக் கூத்தனின் நடனக் கோலத்தைக் கண்ணாரக் கண்டு அழகையும் நோக்கியதும் அப்பரின் சிந்தனையும் கண்ட காட்சியும் இறைவனுடன் பேசுவது போல உணர்ந்தார். இறைவன் "என்று வந்தாய்" எனப் புன்முறுவலுடன் கேட்பது போல ஒரு திருக்குறிப்பை உணரும்படி தோற்றியது. தம்மை இறைவன் பால் இழந்த அப்பர் "அத்தா உன் ஆடல் காண அடியேன் வந்தேன்" என்று கூறியவாறு இறைவனைப் போற்றிப் பாடினார். இப்பாடல்கள் நாலாந் திருமுறையில் அமைந்துள்ளன. பாடல்களை அறிவோம்.

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

1. **கருநட்ட கண்டனை அண்டத்**
**தலைவனைக் கற்பகத்தைச்**
**செருநட்ட மும்மதில் எய்யவல்**
**லானைச் செந் தீமுழங்கத்**
**திருநட்டம் ஆடியைத் தில்லைக்கு**
**இறையைச்சிற் றம்பலத்துப்**
**பெருநட்டம் ஆடியை வானவர்**
**கோனென்று வாழ்த்துவனே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஒன்றி யிருந்து நினைமின்கள்
உந்தமக்கு ஊனமில்லைக்
கன்றிய காலனைக் காலால்
கடிந்தான் அடியவர்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட்
சிற்றம் பலத்து நட்டம்
என்றுவந் தாய்என்னும் எம்பெரு
மான்றன் திருக்குறிப்பே.

3. கன்மன வீர்கழி யுங்கருத்
தேசொல் லிக் காண்பதென்னே
நன்மன வர்நவில் தில்லை யுள்
சிற்றம் பலத்து நட்டம்
பொன்மலை யில்வெள்ளிக் குன்றது
போலப் பொலிந்திலங்கி
என்மன மேயொன்றிப் புக்கனன்
போந்த சுவடில்லையே.

4. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைச் சிதம்பரம்

திருநாவுக்கரசர் தமது தரிசனைச் சுற்றுலாவில் தில்லை நடராசப் பெருமானைத் தரிசித்தார். பெருமானின் அருளையும் அழகையும் நன்கு கண்டு வணங்கி அவ்விடத்திலேயே உழவாரத் தொண்டு செய்து இன்புற்றார். இதே காலத்தில் "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்ற தொடரில் பதிகம் பாடினார். பாடல் ஐந்தாம் திருமுறையில் உள்ளது.

தில்லை பண் : திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

1. அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே

2. அரும்பற் றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
கரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூர் எம்பிரானையே.

3. அரிச்சற் றவினை யால்அடர்ப் புண்டுநீர்
எரிச்சற் றக்கிடந் தார்என்று அயலவர்
சிரிச்சற் றுப்பல பேசப்ப டாமுனம்
திருச்சிற் றம்பலம் சென்றடைந்து உய்ம்மினே

4. அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வவ்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஊனில்ஆவி உயிர்கும் பொழுதெலாம்
நான்நி லாவி இருப்பன்என் நாதனைத்
தேன்நி லாவிய சிற்றம் பலவனார்
வான்நி லாவி இருக்கவும் வைப்பரே.

6. சிட்டர் வானவர் சென்று வரங் கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும்அச்
சிட்டர் பால்அணு கான்செறு காலனே.

7. ஒருத்த னார்உல கங்கட்கு ஒருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னார் இளை யார்விடம் உண்டஎம்
அருத்த னார்அடி யாரை அறிவரே.

8. விண்நி றைந்தோர் வெவ்வழ லின்னுரு
எண்நி றைந்த இருவர்க்கு அறிவொணாக்
கண்நி றைந்த கடிபொழில் அம்பலத்து
உள்நி றைந்துநின்று ஆடும் ஒருவனே.

9. வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லைவட் டம்மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லை வட் டந்திசை கைதொழு வார்வினை
ஒல்லை வட் டங்கடந்து ஓடுதல் உண்மையே.

10. நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடி யும்திரிந் தும்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்து
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மதுரவாய் மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத் தான்முடி பத்திற்
மிதிகொள் சேவடி சென்றடைந்து உய்ம்மினே.

சில நாட்கள் தில்லையில் உழவாரத் தொண்டு செய்த பின் சிவாலய தரிசனையில் வேறு தலங்களைத் தரிசித்தார். இவ்வாறு சில ஆலயங்களைத் தரிசித்தாலும் தில்லைத் தாண்டவரின் பற்றுதல் அப்பரை உடன் தில்லைச் சிதம்பரத்தை நாட வைத்தது. மீண்டும் சிதம்பரம் வந்து நினைப்பவர் மனதைக் கோயிலாகக் கொண்டு இறைவன் மீது பின்வரும் பாடலைப் பாடினார்.

ஐந்தாம் திருமுறை திருக்குறுந்தொகை

1. "பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந்து உய்வனோ.

2. தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய ஒருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்த னைக்கொடி யேன்மறந்து உய்வனோ.

3. கட்டும் பாம்பும் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டுஎரி ஆடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை
எட்ட னைப்பொழு தும்மறந்து உய்வானோ.

4. மாணி பால்கறந்து ஆட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தஎன்
ஆணி யைச்செம்பொன் அம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந்து உய்வனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பித்த னைப்பெருங் காடரங் காவுடை
முத்தனைமுளை வெண்மதி சூடியைச்
சித்த னைச்செம்பொன் னம்பலத் துள்நின்ற
அத்த னையடி யேன்மறந்து உய்வனோ.

6. நீதி யைநிறை வைமறை நான்குடன்
ஓதி யையொரு வர்க்கும் அறிவொணாச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனின் அம்பலத்து
ஆதி யைஅடி யேன்மறந்து உய்வனோ

7. மைகொள் கண்டன்எண் தோளன்முக் கண்ணினன்
பைகொள் பாம்பரை ஆர்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம்ப லத்தெங்கள்
ஐய னைஅடி யேன்மறந்து உய்வனோ.

8. முழுதும் வானுல கத்துள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்தசிற் றம்பலக் கூத்தனை
இழுதை யேன்மறந்து எங்ஙனம் உய்வனோ.

9. காரு லாமலர்க் கொன்றையந் தாரனை
வாரு லாமுலை மங்கைம ணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை
ஆர்கி லாஅமு தைமறந்து உய்வனோ.

10. ஓங்கு மால்வரை யேந்தலுற் றான்சிரம்
வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
தேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப்
பாங்கி லாத்தொண்ட னேன்மறந்து உய்வானோ.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் பெருமான் மேற்கூறிய திருக்குறுந்தொகையைப் பாடியவாறே திருச்சிற்றம்பலத்தை அடைந்தார். அவ்விடத்தில் அப்பர் "அரியானை" என்னும் தொடரில் பெரிய திருத்தாண்டகத்தைப் பாடினார். இப்பதிகம் ஆறாந்திருமுறையில் முதலாவது பதிகமாக அமைந்த சிறப்புடையது. பதிகத்தை அறிவோம்.

**தில்லையிற் பாடிய பெரிய திருத்தாண்டகம்**

1. அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத் தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"

2. கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய் வானை
ஆரூரும் புகுவானை அறிந்தோ மன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லா தானை
வானவர்க ளெப்பொழுதும் வணங்கி ஏத்தப்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

3. கருமானின் உரியதளே உடையா வீக்கிக்
கனைகடல்கள் கலந்தொலிப்ப அனல்கை ஏந்தி
வருமானத் திரள்தோள்கள் மட்டித் தாட
வளர்மதியஞ் சடைக்கணிந்து மானேர் நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண
அமரர்கணம் முடிவணங்க ஆடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

4. அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன் தன்னை
அமரர்கள்தம் பெருமானை அரனைமூவா
மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் தன்னை
மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையுந் திசைகளெட்டுந்
திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவு மாய
பெருந்தகையைப் பெரும் பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

5. அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அருள்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பெருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொது நீக்கித் தனைநினைய வல்லோர்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

6. கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்
கனவயிரக் குன்றனைய காட்சி யானை
அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை
அருமறையோ டாறங்க மாயி னானைக்
கரும்பமருங் கடிபொருள்கள் சூழ்தென் னாரூர்ச்
சுடர்க்கொழுந்தைத் துளக்கில்லா விளக்கை மிக்க
பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. வரும் பயனை எழுநரம்பினோசை யானை
வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும்பயம்செய் அவுணர்புர மெரியக் கோத்த
அம்மானை அலைகடல்நஞ் சயின்றான் தன்னைக்
சுரும்பமரும் குழல்மடவார் கடைக்கண் நோக்கில்
துளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும் பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

8. காரானை ஈருரிவைப் போர்வை யானைக்
காமருபூங் கச்சியே கம்பன் தன்னை
ஆரேனும் அடிய வர்கட் கணியான் தன்னை
அமரர்களுக் கறிவரிய அளவி லானைப்
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

9. முற்றாத பால்மதியஞ் சூடி னானை
மூவுலகுந் தானாய முதல்வன் தன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தன்னைத்
திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

10. காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியை சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

திருச்சிற்றம்பலம்

அப்பர் பெருமான் தமது இறையருட் சித்தியால் இறைவனின் பணியைத் தாம் ஏற்றார். மனித வாழ்வில் மெய்யுணர்வுடன் எமது அவயவங்கள் ஒவ்வொன்றும் தத்தமது பணி செய்யவே இறைவன் உணர்த்தினார். அவற்றின் பணியை நாம் உணர்ந்து செய்ய வேண்டுமென்பதை பொதுப் பதிகமாக திருஅங்கமாலை என்னும் பதிகத்தில் பாடினார். எமது உறுப்புகள் யாவும் தாமாகவே முன்வந்து செயற்படும் வண்ணம் நாம் வணங்கும் இறைவனை வேண்டி முறைப்படி செயற்படவே இதனைப் பாடினார். திரு அங்கமாலைப் பதிகம் நாலாம் திருமுறையில் அமைந்துள்ளது. அதையும் அறிந்து செயற்படுவோம்.

திரு அங்கமாலை பண் : சாதாரி

திருச்சிற்றம்பலம்

1. தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

2. கண்காள் காண்மிங்களோ கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசி நின்று ஆடும் பிரான் தன்னைக்
கண்காள் காண் மின்களோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. செவிகாள் கேண்மின்களோ – சிவன்
எம் மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும்
செவிகாள் காண்மின்களோ.

4. மூக்கே நீ முரலாய் – முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்.

5. வாயே வாழ்த்துகண்டாய் – மத
யானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்து கண்டாய்.

6. நெஞ்சே நீ நினையாய் – நிமிர்
புன்சடை நின் மலனை
மஞ்சாடும் மலைமங்கைம ணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

7. கைகாள்கூப்பித் தொழீர் – கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

8. ஆக்கை யாற்பயன் என் – அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கையாற் பயன் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கால்களாற் பயன்என் - கறைக்
கண்டன் உறைகோயில்
கோலக் கே ாபுரக் கோகரணம் சூழாக்
கால்களாற் பயன் என்.

9. உற்றார் ஆருளரோ உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆருள ரோ.

10. இறுமாந் திருப்பன் கொலோ - ஈசன்
பல்கணத்து எண்ணப் பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்கு
இறுமாந்து இருப்பன் கொலோ.

11. தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசர் தில்லையில் பதிகங்கள் பாடிய வண்ணம் இதய சுத்தியோடு திருவீதிகளில் உழவாரத் தொண்டு செய்து வந்தார். அக்காலத்தில் சீர்காழிப்பதியில் அவதரித்து உமையவ ளிடம் ஞானப்பால் உண்டு மூன்று வயதில் இறைவனைப் பாடிய தவஞானக் குழந்தையான திருஞானசம்மந்தரை நேரில் கண்டு போற்ற வேண்டுமென்றவாவுற்றார். இதனால் நடராசப் பெருமானை வணங்கி விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். மக்களின் பிறவிப் பிணியகற்றும் தில்லைத் திரு வீதியில் காலால் நடக்காது வீதியில் உருண்டு புரண்டு பிரதிட்டை செய்த வண்ணம் விட்டகன்று சீர்காழியை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அப்பர்" என்னும் பெயர் திருநாவுக்கரசருக்கு நிலைத்தமை

திருநாவுக்கரசர் தம்மைக் காண வருவதையறிந்த சம்பந்தர் பேருவகையுடன் தமது அடியார்களுடன் எதிர் கொண்டழைத்து வரவேற்றார் . நாவுக்கரசர் தமது அன்பு மேலிட சம்பந்தரின் அடியார் கூட்டத்தினுட் சென்று அவரின் கால்களில் வீழ்ந்து வணங்கினார். திருஞானசம்பந்தர் தமது பிஞ்சுக்கை களால் நாவுக்கரசரின் கால்களைப் பற்றித் தாமும் வணங்கினார். தம்மை விட முதியவராக இருந்த நாவுக்கரசரைத் தமது தந்தையாக எண்ணி "அப்பரே" என அழைத்தார். நாவுக்கரசரும் "அடியேன்" என்றார். அன்று முதல் அப்பர் என்றும் பெயர் நிலைத்துக் கொண்டது.

அப்பரும் (ஆளுடைப்) பிள்ளையும் ஒருவரை ஒருவர் தழுவித் தமது பேரன்பை வலியுறுத்தினர். இருவரும் தோணியப்பரைத் தரிசித்தனர். அவ்விடத்தில் சம்பந்தரின் வேண்டுதலையடுத்து அப்பர் சீர்காழியில் "பார் கொண்டு முடி" என்னும் தொடரில் பதிகம் பாடினார்.

## திருவடி தீட்சை பெற வேண்டிப்பாடியது

சீர்காழியிலிருந்து திருஞானசம்பந்தரிடம் விடை பெற்ற அப்பர் மேலும் பல திருத்தலங்கள் சென்று பாடியும் உளவாரத் தொண்டு செய்தும் இன்புற்றார். தொடர்ந்து திருச்சக்தி முற்றத்துச் சிவாலயஞ் சென்று சிவக்கொழுந்தீசரையும் உமாதேவியாரையும் வணங்கி "கோவாய் முடுகி" என்றடியெடுத்து "கூற்றம் வந்து குமைப்பதன் முன் பூவார் திருவடிகள் என்தலை மேல் பொறித்து வைப்பாய்" என்று முடித்த பதிகத்தைப் பாடினார். அப்போது சிவக் கொழுந்தீசர் "திருநல்லூருக்கு வா வா" என்று குரல் கொடுத் தருளினார். அப்பர் இறைவனையும் இறைவியையும் வணங் கியதும் திருநல்லூருக்குச் சென்றார். திருச்சக்தி முற்றத்தில் பாடிய பாடலை அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

1. "கோவாய் முடுகி யடுதிறற் கூற்றம் குமைப்பதன் முன்
பூவாரடிச் சுவடென் மேல் பொறித்துவை போக விடில்
மூவா முழுப்பழி மூடுங் கண்டாய் முழங்குந் தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்துறையும் சிவக்கொழுந்தே"

2. காய்ந்தாய் அனங்கன் உடலம் பொடிபடக் காலனை முன்
பாய்ந்தாய் உயிர்செகப் பாதம் பணிவார்தம் பல்பிறவி
ஆய்ந்தாய்ந்து அறுப்பாய் அடியேற்கு அருளாய் உன் அன்பர் சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத்து உறைசிவக்கொழுந்தே.

3. பொத்தார் குரம்பை புகுந்து ஐவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர் போல் மறுகும் என் சிந்தை மறுக் கொழிலி
அத்தா அடியேன் அடைக்கலம் கண்டாய் அமரர்கள் தம்
சித்தா திருச்சந்தி முற்றத்து உறையும் சிவக் கொழுந்தே.

4. நில்லாக் குரம்பை நிலையாக் கருதி இந் நீள்நிலத்தொன்று
இல்லாக் குழிவீழ்ந்து அயர்வுறு வேனைவந்து ஆண்டுகொண்டாய்
வில்லேர் புருவத்து உமையாள் கணவா விடிற்கெடுவேன்
செல்வா திருச்சத்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே.

5. கருவுற்றிருந்துன் கழலே நினைந்தேன் கருப்புவியில்
தெருவிற் புகுந்தேன் திகைத்தடி யேனைத் திகைப் பொழிவி
உருவிற் றிகழும் உமையாள் கணவா விடிற் கெடுவேன்
திருவிற் பொலிசக்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே.

6. வெம்மை நமன்தமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மைஉன் தாள் என்றன் நெஞ்சத்து எழுதிலை ஈங்கு இகழில்
அம்மை அடியேற்கு அருளுதி என்பது இங்கு ஆர் அறிவார்
செம்மை தருசக்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. விட்டார் புரங்கள் ஒரு நொடி வேவஓர் வெங்கணையால்
கட்டாய் என் பாசத் தொடர்பறுத்து ஆண்டுகொள் தும்பிபம்பும்
மட்டார் குழலி மலைமகள் பூசை மகிழ்ந்தருளும்
சிட்டா திருச்சக்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே.

8. இகழ்ந்தவன் வேள்வி அழித்திட்டு இமையோர் பொறை இரப்ப
நிகழ்ந்திட அன்றே விசயமும் கொண்டது நீலகண்டா
புகழ்ந்த அடியேன்றன் புன்மைகள் தீரப் புரிந்து நல்காய்
திகழ்ந்த திருச்சத்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே.

9. தக்கார்வம் எய்திச் சமண்தவிர்த்து உன்றன் சரண் புகுந்தேன்
எக்காதல் எப்பயன் உன்திறம் அல்லால் எனக்குளதே
மிக்கார் திலையுள் விருப்பா மிகவட மேரு என்னும்
திக்கா திருச்சத்தி முற்றத்து உறையும் சிவக்கொழுந்தே.

10. பொறித்தேர் அரக்கன் பொருப்பெடுத்து உற்றவன் பொன்முடிதோள்
இறத்தாள் ஒருவிரல் ஊன்றிட்டு அலற இரங்கி ஒள்வாள்
குறித்தே கொடுத்தாய் கொடியேன் செய் குற்றக் கொடுவினை நோய்
செறுத்தாய் திருச்சத்தி முற்றத்து உறையும் சிவக் கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்.

## திருநல்லூரில் திருவடிதீட்சை பெற்றது

திருச்சக்தி முற்றத்திலிருந்து சம்பந்தரிடம் விடை பெற்றுக் கொண்ட அப்பர் திருநல்லூரை அடைந்தார். அப்பர் இறைவனை வீழ்ந்து வணங்கி எழும் போது "உன்னுடைய நினைப்பை முடிக்கிறோம்" என்று கூறிய சிவபெருமான் அப்பரின் தலை மீது தமது பாத மலரைச் சூட்டியருளினார். அப்பர் இறைவனின் பெருங் கருணையை எண்ணிப்பாடிய திருத்தாண்டகத்தை அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

1. நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழு மதியின் தளிர்வைத்தார் சிறந்துவானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறற்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.

2. பொன் நலத்த நறுங்கொன்றை சடைமேல் வைத்தார்
புலியுரியின் அதள் வைத்தார் புனலும் வைத்தார்
மன்நலந்த திரள் தோல் மேல் மழுவாள் வைத்தார்
வார்காதிற் குழைவைத்தார் மதியும் வைத்தார்
மின்நலத்த நுண்ணிடையாள் பாகம் வைத்தார்
வேழத்தி னுரிவைத்தார் வெண்ணூல் வைத்தார்
நன்நலத்த திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

3. தோடேறு மலர்க்கொன்றை சடைமேல் வைத்தார்
துன்னெருக்கின் வடம் வைத்தார் துவலை சிந்தப்
பாடேறு படுதிரைக ளெறிய வைத்தார்
பனிமத்த மலர்வைத்தார் பாம்பும் வைத்தார்
சேடேறு திருநுதல் மேல் நாட்டம் வைத்தார்
சிலை வைத்தார் மலைபெற்ற மகளை வைத்தார்
நாடேறு திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வில்லருளி வருபுருவத் தொருத்தி பாகம்
பொருத்தாகி விரிசடைமேல் லருவி வைத்தார்
கல்லருளி வரிசிலையா வைத்தார் ஊராக்
கயிலாய மலைவைத்தார் கடவூர் வைத்தார்
சொல்லருளி அறம் நால்வர்க் கறிய வைத்தார்
சுடுசுடலைப் பொடிவைத்தார் துறவி வைத்தார்
நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

5. விண்ணிரியுந் திரிபுரங்க ளெரிய வைத்தார்
வினைதொழு வார்க் கறவைத்தார் துறவிவைத்தார்
கண்ணெரியாற் காமனையும் பொடியா வைத்தார்
கடிகமல மலர் வைத்தார் கயிலை வைத்தார்
திண்ணெரியுந் தண்புனலு முடனே வைத்தார்
திசைதொழு மிசையமரர் திகழ்ந்து வாழ்த்தி
நண்ணரிய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

6. உற்றுலவு பிணியுலகத் தெழுமை வைத்தார்
உயிர்வைத்தார் உயிர் செல்லுங்கதிகள் வைத்தார்
மற்றமரர் கணம் வைத்தார் அமரர் காணா
மறை வைத்தார் குறைமதியம் வளர வைத்தார்
செற்றமலி யார்வமொடு காம லோபஞ்
சிறவாத நெறி வைத்தார் துறவி வைத்தார்
நற்றவர் சேர் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

7. மாறுமலைந் தாரரண மெரிய வைத்தார்
மணிமுடிமேல் அர வைத்தார் அணிகொள் மேனி
நீறுமலிந் தெரியாடல் நிலவ வைத்தார்
நெற்றி மேற் கண்வைத்தார் நிலயம் வைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமலைந் தறுதிரைக ளெறிய வைத்தார்
ஆர்வத்தா லடியமரர் பரவவைத்தார்
நறுமலர்த் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

8. குலங்கள் மிகு மலைகடல்கள் ஞாலம் வைத்தார்
குருமணி சேரரவைத்தார் கோலம் வைத்தார்
உலங்கிளரும் அரவத்தின் உச்சி வைத்தார்
உண்டருளிவிடம் வைத்தார் எண்டோள் வைத்தார்
நிலங்கிளரும் புனல்கனலுள் அனிலம் வைத்தார்
நிமிர் விசும்பின் மிசை வைத்தார் நினைந்தாரிந்நாள்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே

9. சென்றுருளுங் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்
திசைபத்தும் இரு நிலத்தில் திருந்த வைத்தார்
நின்றருளி யடியமரர் வணங்க வைத்தார்
நிறை தவமும் மறைபொருளும் நிலவ வைத்தார்
கொன்றருளிக் கொடுங்கூற்றம் நடுங்கியோடத்
குரை கழற்சே வடிவைத்தார் விடையும் வைத்தார்
நன்றருளுந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.

10. பாம்புரிஞ்சி மதிகிடந்து திரைக ளேங்கப
பனிக்கொன்றை சடை வைத்தார் பணி செய்வானோர்
ஆம்பரிசு தமக்கெல்லாம் அருளும் வைத்தார்
அடுசுடலைப்பொடி வைத்தார் அழகும் வைத்தார்
ஓம்பரிய வல்வினைநோய் தீர வைத்தார்
உமையையொரு பால்வைத்தார் உகந்து வானோர்
நாம்பரவும் திருவடியென் தலை மேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. குலங்கிளரும் வருதிரைக ளேழும் வைத்தார்
குருமணி சேர் மலை வைத்தார் மலையைக் கையால்
உலங்கிளர எடுத்தவன் தோள் முடியும் நோவ
ஒருவிரலா லுறவைத்தார் இறைவா என்று
புலம்புதலும் அருளொடுபோர் வாளும் வைத்தார்
புகழ் வைத்தார் புரிந்தாளாக் கொள்ள வைத்தார்
நலங்கிளருந் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமாமனார் நல்ல வாறே.

திருச்சிற்றம்பலம்.

## அப்பூதியடிகளின் தொடர்பும் அவர் மகனின் விடம் தீர்த்தமையும்

திருநல்லூரிலிருந்து விடை பெற்ற அப்பர் பல சிவாலய தரிசினையின் பின் திங்களூரை வந்தடைந்தார். இங்கு வாழ்ந்த சிவவேதியரான அப்பூதி அடிகள் என்பவர் சிவனருள் பெற்ற திரு நாவுக்கரசர் செய்த சாதனைகளையறிந்து அப்பர் மீது அபாரபக்தி பூண்டு தமது பிள்ளைகள் அறச்சாலை, தண்ணீர்ப்பந்தல் முதலான யாவற்றிற்கும் "திருநாவுக்கரசு" எனப் பெயரிட்டு இனிது வாழ்ந்தார். இதையறிந்த அப்பர் அப்பூதியடிகளிடம் வந்தார். இருவரும் தமது நட்பின் தவப் பேற்றினையிட்டு மகிழ்ந்தனர். அப்பருக்கு அன்று அறுசுவையுண்டி வழங்க ஏற்பாடானது. உணவு பரிமாறுவதற்கான வாழைக்குருத்தை வெட்டச் சென்ற அப்பூதியடி களின் மகன் திருநாவுக்கரசு அரவு தீண்டியதால் வீட்டில் வாழைக் குருத்தைத் தந்ததும் விடம் தலைக்கேறி வீழ்ந்து மாண்டான்.

அப்பர் சுவாமிகளின் திருவமுது உண்பது தடைப்படுமே என உணர்ந்ததால் அப்பிள்ளையின் இறந்த உடலை மறைத்து வைத்து விட்டு அப்பரை உணவு பரிமாற அழைத்தனர். அப்பர் தமது இறையருட் தியானத்தால் சிறுவன் இறந்ததை உணர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே அப்பர் அப்பூதிஅடிகளை நோக்கி "இறந்த புதல்வனின் உடலைத் திருக்கோயிலுக்கு எடுத்துவரச் செய்தார். அவ்வாலயத்தில் இறைவனை வேண்டிய அப்பர் "ஒன்று கொலாம்" என்ற தொடரில் பதிகம் பாடினார். சிறுவன் விடம் நீங்கப்பெற்று எழுந்தான் யாவரும் இறைவனை வணங்கிய பின் அப்பூதி அடிகளின் இல்லத்தை நாடினார். யாவரும் மனம் மகிழ அப்பர் திருவமுதுண்டு இன்புற்றார். அப்பர் அப்பூதி அடிகளின் வேண்டுதலின் பேரில் சில நாட்கள் அங்கு தங்கினார். அப்பர் சுவாமிகள் பாடிய பதிகம் வருமாறு:-

பண் : இந்தளம்

1. ஒன்று கொலாம் அவர் சிந்தை உயர் வரை
ஒன்று கொலாம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொலா மிடு வெண்டலை கையது
ஒன்று கொலாமவர் ஊர்வது தானே.

2. இரண்டுகொ லாம்இமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாம் இலங் கும்குழை பொண்ணாண்
இரண்டுகொ லாம்உரு வம்சிறு மான்மழு
இரண்டுகொ லாம்அவர் எய்தின தாமே.

3. மூன்றுகொ லாம்அவர் கண்ணுத லாவன
மூன்றுகொ லாம்அவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொ லாம்கணை கையது வில்நாண்
மூன்றுகொ லாம்புரம் எய்தன தாமே.

4. நாலுகொ லாம்அவர் தம்முகம் ஆவன
நாலுகொ லாம்சன னம்முதல் தோற்றமும்
நாலுகொ லாம்அவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொ லாம்மறை பாடின தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அஞ்சுகொ லாம்அவர் ஆடர வின்படம்
அஞ்சுகொ லாம்அவர் வெல்புலனாவன
அஞ்சுகொ லாம்அவர் காயப்பட்டான்கணை
அஞ்சுகொ லாம்அவர் ஆடின தாமே.

6. ஆறுகொ லாம்அவர் அங்கம் படைத்தன
ஆறுகொ லாம்அவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாம்அவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாம்சுவை யாக்கின தாமே.

7. ஏழுகொ லாம்அவர் ஊழி படைத்தன
ஏழுகொ லாம்அவர் கண்ட இருங்கடல்
ஏழுகொ லாம்அவர் ஆளும் உலகங்கள்
ஏழுகொ லாம்இசை யாக்கின தாமே

8. எட்டுகொ லாம்அவர் ஈறில் பெருங்குணம்
எட்டுகொ லாம்அவர் சூடும் இனமலர்
எட்டுகொ லாம்அவர் தோளிணை யாவன
எட்டுகொ லாம்திசை யாக்கின தாமே.

9. ஒன்பது போல்அவர் வாசல் வகுத்தன
ஒன்பது போல்அவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போல்அவர் கோலக் குழற்சடை
ஒன்பது போல்அவர் பாரிடம் தானே.

10. பத்துக்கொ லாம்அவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாம்எயி றும்நெரிந்து உக்கன
பத்துக்கொ லாம்அவர் காயப்பட்டான் தலை
பத்துக்கொ லாம்அடி யார்செய்கை தானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாரூரில் தரிசனம்

திங்களூரிலிருந்து அப்பூதி அடிகளிடம் விடைபெற்ற அப்பர் திருவாரூரை அடைந்தார். அப்பர் தமதூருக்கு வருவதை அறிந்த சிவனடியார்கள் அனைவரும் அவ்வூர் வீதிகள் அயல் வீடுகள் யாவற்றையும் நன்கு அலங்கரித்து புறநகர் எல்லைக்குச் சென்று எதிர் கொண்டழைத்து வந்தனர். சிவனடியார்களின் பேரன்பையும் ஆதரவையும் கண்ட அப்பர் யாவரையும் வணங்கி "சமணர்களால் உற்ற மாயப் பிணி ஒழிந்து உய்யப் பெற்றேன். இனி நான் பெறலாவது ஒன்றே அது புற்றிடம் கொண்ட பெருமானின் தொண்டருக்குத் தொண்டராகும் புண்ணியமே" என்று கூறித் திருப்பதிகம் பாடிக் கொண்டுதிருத்தல தேவாசிரிய மண்டபத்தை வணங்கியதும் கோயிலுட் சென்றார். அங்கு தியா கேசரை வணங்கி போற்றித்திருத்தாண்டவத்தைப் பாடிப்பரவச மடைந்தார். அப்பர் பெருமான் தொடர்ந்து பல திருத்தலங் களுக்குச் சென்று பாடியும் உழவாரத் தொண்டு செய்தும் திருப்புகலூரை அடைந்தார். திருவாரூரில் பாடிய பதிகத்தையும் அறிவோம்.

போற்றித் திருத்தாண்டகம் :-

1. கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புர மெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

2. வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல் புலித்தோ லாடைக் குழகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

3. மலையான் மடந்தை மணாளா போற்றி
மழ விடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

4. பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படை யுடையாய் போற்றி போற்றி
மன்னிய சீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

5. நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின் பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

7. வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறாபோற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

8. உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர் கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

9. பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

10. பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
யன்றரக்கன் ஐநான்கு தோளுந் தாளுஞ்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூரின் சிறப்பை சம்பந்தருக்குத் தெரிவித்தது

அப்பர் பெருமான் திருப்புகலூரில் இருப்பதையறிந்த சம்பந்தரும் தமது அடியார்கள் புடைசூழத் திருப்புகலூரை வந்தடைந்தார். இரு குரவர்களும் ஒருவரை ஒருவர் பெருவிருப் போடு வணங்கியதும் திருத்தல உலாச்சிறப்பைக் கூறி மகிழ்ந் தனர். அச்சமயம் சம்பந்தர் அப்பரே திருவாரூரிலிருந்து வரும் தாங்கள் வணங்கிய திருவாரூரின் சிறப்பைக் கூறுமென வேண் டினார். அதைக் கேட்டதும் அப்பர் திருவாரூரில் திருவாதிரை விழாவின் பெருமையை "முத்து விதானமணிப் பொற்கவரி" என்று தொடங்கும் பதிகம் மூலம் பாடியருளினார். அப்பதியில் அப்பர் சில காலம் தங்கியிருந்து தம் இயல்பான உழவாரத் தொண் டாற்றினார். திருப்புகலூரிலிருந்து திருவாரூர்ச் சிறப்பைப் பாடிய பாடல் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

1. முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தனாரூ ராதிரை நாளா லதுவண்ணம்.

2. நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும்என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்கு
அணியான் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்

3. வீதிகள் தோறும் வெண்கொடியோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மாமணிகள் ஒளிதோன்றச்
சாதிகளாய் பவளமு முத்துத் தாமங்கள்
ஆதியாரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

4. குணங்கள் பேசிக் கூடிப் பாடித் தொண்டர்கள்
பிணங்கித் தம்மிற் பித்தரைப் போலப் பிதற்றுவார்
வணங்கி நின்று வானவர் வந்து வைகலும்
அணங்கன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்

5. நிலவெண் சங்கும் பறையும் ஆர்ப்ப நிற்கில்லாப்
பலரும் இட்ட கல்லவடங்கள் பரந்தெங்கும்
கலவ மஞ்ஞை கார் என்று எண்ணிக் களித்து வந்து
அலமர் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

6. விம்மா வெருமா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண்பு இலராய்த் தரியார் தலையால் முட்டுவார்
எம்மான் ஈசன் எந்தை என் அப்பன் என்பார்கட்கு
அம்மான் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. செந்துவர் வாயார் செல்வன் சேவடி சிந்திப்பார்
மைந்தர்களோடு மங்கையர் கூடி மயங்குவார்
இந்திரனாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும்
அந்திரன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்

8. முடிகள் வணங்கி மூவாதார்கள் முன் செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையார் பின் செல்ல
பொடிகள் பூசிப் பாடும் தொண்டர் புடைசூழ
அடிகள் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணமே.

9. துன்பநும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பநும்மை ஏத்து நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்

10. பாரூர் பௌவத் தானை பத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாடல் ஆடல் அறாத செம்மாப்பார்ந்து
ஓரூர் ஒழியாது உலகம் எங்கும் எடுத்தேத்தும்
ஆரூரன்றன் ஆதிரை நாளால் அது வண்ணம்.

திருச்சிற்றம்பலம்

## திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றது

அதன் பின் திருப்புகலூரிலிருந்து புறப்பட்டு மேலும் பல திருத்தலங்களைத் தரிசித்த பின் திருவீழிமிழலையை வந்தடைந்தார். சம்பந்தரும் தமது உலாவில் திருவீழிமிழலையில் அப்பருடன் இணைந்தார். அவ்விடத்தில் வானம் பொய்த்ததால் பஞ்சம் ஏற்பட்டது. அடியார்களும் அவ்வூர் மக்களும் வறுமையால் வாடினர். இரு குரவர்களும் இறைவனை வேண்டினர். சிவனடியார்கள் மீது இரங்கிய இறைவன் அப்பர், சம்பந்தர் ஆகிய இருவரின் கனவிற் தோன்றி "உங்கள் அடியார்களின் பசி போக்குவதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரில் இக்கோயிலின் கிழக்கில் உள்ள பீடத்திலும் மேற்கிலுள்ள பீடத்திலும் படிக் (பொற்) காசுவைப்போம்" எனத் தெரிவித்தார். அதன்படி திருக்கோயிலின் கிழக்கேயிருந்த பீடத்திலும் மேற்கேயிருந்த பீடத்திலும் திருஞானசம்பந்தருக்கும் அப்பருக் கும் நாள் தோறும் இறைவன் படிக்காசு வைத்தார். இருவரும் அதனை எடுத்துக் கடையில் உணவுப் பண்டங்களை வாங்கி அடியார்களுக்கு அன்னப்பணியாற்றினர்.

இறையருளின் திருவருளும் இருகுரவர்களதும் அறப் பணியும் "நல்லாரொருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க் கும் பெய்யும் மழை" என்ற ஔவைமொழி புறச்சான்றாக அமைந்தது. வானம் மகிழ்ந்தது போதிய மழை பெய்தது. நெற் பயிருடன் நற்பயிர் வகை பொலிந்தன. பஞ்சம் நீங்கியது உணவுக் கான படிக்காசுகளின் தேவை நீங்கியது. இறையருளை வியந்த அப்பரும் ஆளுடைப் பிள்ளையும் திருவீழிமிழலை அப்பனையும் அம்மையையும் பலமுறை வணங்கினர். இவர்களின் திருத்தல உலா திருமறைக்காட்டை அடைந்தது.

## மறைக்கதவு திறக்கப் பாடியது

இருவரும் திருமறைக் காட்டை அடைந்ததும் அவ்வூர்ச் சிவனடியார்கள் பெருமகிழ்வில் ஆரவாரத்துடன் இருவருக்கும் பெரு வரவேற்பளித்து திருமறைக் காட்டுச் சிவாலயத்திற்கு அழைத்துச் சென்றனர். அவ்வாலயத்தின் வாசற்கதவு மூடியிருந்தது. அடியார்கள் தமது தரிசனைக்காக வேறொரு வாசலால் சென்றே வழிபட்டனர். அச்சிவனடியார்கள் வெகு காலத்திற்கு முன்பே இவ்வாலயத்தின் மணி வாசற்கதவு வேதங்களாற் பூட்டப்பட்டு அடைக்கப்பட்டதாம் இக்கதவு திறக்க வல்லவர்களெவரும் இதுவரை முன் வராததால் அன்று தொட்டே ஆலயத்துட் செல்லவென வேறொரு வாசலமைத்து வழிபாடு தொடர்வதாகத் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கேட்டதும் திருஞானசம்பந்தர் நாம் இந்த வாசற் கதவைத் திறக்கச் செய்து இந்த வாசலாற் சென்று வழிபடுவோம் என்று திருவுளங் கொண்டதால் அப்பரே நீர் இந்தக் கதவு திறக்கப் பாடும் என்றார். அப்பர் பெருமான் இறைவனை வேண்டி "பண்ணினேர் மொழியாள் உமைபங்கரோ" என்ற தொடரில் பதிகம் பாடினார். அப்பர் இப்பதிகத்தின் பத்தாவது பாடலை மிக வைராக்கியத்துடன் பாடியபோது திருக்கதவு தானாகத் திறந்தது. யாவரும் இறையருளையும் அப்பர் பெருமானின் அற்புதத்தையும் வியந்து ஆரவாரஞ் செய்தனர்.

குரவர்கள் இருவரும் இறையருளை வேண்டி ஆலயத்தினுட் செல்லச் சிவனடியார்களும் பின்தொடர்ந்தனர். யாவரும் ஆலயதரிசனஞ் செய்த பின் அதே வாசலால் வெளியே வந்தனர். யாவரும் வெளியே வந்ததும் திருஞான சம்பந்தர் "சதுரம் மறை" என்ற தொடரில் முதலாவது பாடல் பாடியதும் அத்திருக்கதவு தானாகவே மூடிக்கொண்டது. இதன் அற்புதத்தை யாவரும் வியந்தனர். அன்று முதல் அத்திருத்தலமானது இறையருளை வேண்டிப் பாடிய இருகுரவர்களின் அற்புதத்தால் வழமை போலச்சிவனடியார்களின் வழிபாட்டிற்காகத் தினமும் செல்ல அருளியது. அப்பர் பெருமான் திருக்கதவு திறக்கப் பாடிய "பண்ணின்நேர்மொழி" என்னும் பாடல் ஐந்தாம் திருமுறையில் அமைந்துள்ளது.

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

1. **பண்ணின் நேர்மொழி யாள்உமை பங்கரோ**
**மண்ணி னார்வலம் செய்ம்மறைக் காடரோ**
**கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்**
**திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஈண்டு செஞ்சடை ஆகத்துள் ஈசரோ
முண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேஅருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே.

3. அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரம் கட்ட சுவண்டரோ
பட்டம் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வம்திறப் பிம்மினே.

4. அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரம் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரிவிக்கவே.

5. மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சும்கழல் எத்தரோ
விலையில் மாமணி வண்ண உருவரோ
தொலைவி லாக்கத வம்துணை நீக்குமே.

6. பூக்கும் தாழை புறணி யருகெலாம்
ஆக்கும் தண்பொழில் சூழ்மறைக்காடரோ
ஆர்க்கும் காண்பரி யீரடி கேள்உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே.

7. வெந்த வெண்பொடில் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந்து இறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆறு சூடும் அணி மறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மான்இந்த
மாறி லாக்கத வம்மலி நீக்குமே.

9. சுண்ண வெண்பொடிப் பூசும் சுவண்டரோ
பண்ணி யேறுகந்து ஏறும் பரமரோ
அண்ண லாதிஅணி மறைக் காடரோ
திண்ண மாக்கத வம்திறப் பிம்மினே.

10. விண்ணு ளார்விரும் பிஎதிர் கொள்ளவே
மண்ணு ளார் வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.

11. அரக்கனைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்கம் ஒன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வம்திறப் பிம்மினே.

திருச்சிற்றம்பலம்.

## திருமறைக் காட்டில் தங்கிய அப்பரை இறைவன் திருவாய்மூருக்கு அழைத்தது

திருமறைக் காட்டில் அப்பர் பதிகம் முழுவதும் பாடிய பின்பே திருமறையால் பூட்டப்பெற்ற திருக்கதவு திறந்தது. அதே கதவு சம்பந்தர் ஒரு பாடல் பாடியதும் மூடப்பட்டது. இதனால் விசனமுற்ற அப்பர் ஆண்டவனின் திருவுள்ளம் யாதென அறியாது கவலையுடன் அயர்ந்து விட்டார். சற்று நேரத்தில் சிவபெருமான் அங்கமெல்லாம் திருநீறணிந்த கோலத்தில் நாவுக்கரசரின் கனவிற் தோன்றி "நாம் திருவாய்மூரில் இருப்போம் அங்கு என்னைத் தொடர்ந்து வா" என அழைத்தார். அச்சமயம் இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கு வழங்கிய சொற்கேட்டு எழுந்து "அறிவிளங்க என்னை வா என்று சொல்லிப் போனாரே நானும் உடன் செல்வேன்" என எண்ணியதும் "எங்கே என்னை" என்று தொடங்கும் பாடலைப் பாடிய வண்ணம் திருமறைக்காட்டை விட்டு விரைந்து திருவாய் மூருக்குப் புறப்பட்டார். எம்பெருமான் சற்றுமுன் செல்வதுபோலச் செல்ல அப்பரும் விரைவாகச் சென்றதும் இடையில் ஒரு பொற் கோயிலைக் காட்டி அதனுட் சென்றார். இவ்வாறு வாய்மூருக்கு இரவிற் சென்ற அப்பர் பாடிய பதிகம் ஐந்தாம் திருமுறையில் அமைந்துள்ளது. பதிகத்தை அறிவோம்.

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

1. எங்கே என்னை இருந்து இடம் தேடிக் கொண்டு
அங்கே வந்து அடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாஎன்று போனார் அது என்கொலோ

2. மன்னு மாமறைக்காட்டு மணாளனார்
உன்னி உன்னி உறங்குகின் றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவன் ஆமா சொல்லி
என்னை வாஎன்று போனார்அது என்கொலோ

3. தஞ்சே கண்டேன் தரிக்கிலா தார்என்றேன்
அஞ்சேல் உன்னை அழைத்தவந் தேன் என்றார்
உஞ்சேன் என்றுகந் தேஎழுந்து ஓட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூர் அடிகளே

4. கழியக் கண்டிலேன் கண்ணெதி ரேகண்டேன்
ஒழியப் போந்திலேன் ஒக்கவே ஓட்டந்தேன்
வழியிற் கண்டிலேன் வாய்மூர் அடிகள்தம்
சுழியிற் பட்டுச் சுழல்கின்றது என்கொலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒள்ளி யார்இவர் அன்றிமற்று இல்லையென்று
உள்கி உள்கி உகந்திருந் தேனுக்குத்
தெள்ளி யார்இவர் போலத் தெருவாய்மூர்க்
கள்ளி யார்அவர் போலக் கரந்தே

6. யாதே செய்துமி யாமலோம்நீ யென்னில்
ஆதே யேயும் அளவில் பெருமையான்
மாதே வாகிய வாய்மூர் மருவினார்
போதே என்றும் புகுந்ததும் பொய்கொலோ

7. பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி ட்டம் தவிர்ப்பார் அவரைப் போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேளனா
ஓடிப் போந்திங்கு ஒளித்தவாறு என்கொலோ

8. திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித் தாருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடையார் இவர் பித்தரே.

9. தனக்கே றாமை தவிர்கென்று வேண்டினும்
நினைத்தேன் பொய்க்குள் செய்திடு நின்மலன்
எனக்கே வந்தெதிர் வாய்மூருக் கேளனாப்
புனற்கே பொற்கோயில் புக்கதும் பொய்கொலோ

10. தீண்டற் கரிய திருவடி ஒன்றினால்
மீண்டற் கும்மதீர்த் தார்அரக் கன்தனை
வேண்டிக் கொண் டேன்திரு வாய்மூர் விளக்கினைத்
தூண்டிக் கொள்வன் நான் என்றலும் தோன்றுமே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பழையாறை வடதளியின் வழிபாடு

அப்பர் பெருமான் தமது திருச்சுற்றுலாவில் திருப்பழை யாறை என்னும் திருத்தலத்தை வணங்கச் சென்றார். அங்கு வடதளி என்னும் சிவாலயம் சமணர்களால் மறைக்கப்பட்டு சமணப் பாளியாகவே செயற்பட்டது. இதனைக் கண்ணுற்றவர் அருகேயிருந்த சிவபிரானைத் துதித்தவண்ணம் உண்ணா நோன்பிருந்தார். அப்பரின் சித்தப்படி இறைவன் அவ்வூர் அரசனின் கனவிற் தோன்றி "எம்மைச் சமணர்கள் மறைத் துள்ளனர்" எனது பக்தர் திருநாவுக்கரசு என்னை வழிபடுவதன் பேரில் சமணர்களை அழித்து எனது ஆலயத்தை விடுவிக்குமாறு கூறி லிங்கத்தை மறைத்து வைத்த இடத்தையும் தெரிவித்தார். மன்னன் இறையருளை வியந்து தமது அமைச்சர்கள் பிரதானி களுடன் சென்று உரிய சிவலிங்கத்தை மீட்டு ஆயிரம் சமணர் களையும் அழித்துச் சமணர் பாளிகளையும் அழித்தான். மன்னன் திருநாவுக்கரசரை வணங்கி அழைத்துச் சென்று வழிபட உதவினார். மேலும் வடதளியில் ஆலய விமானம் நிறுவி வேண்டியன செய்தார். அப்பர் இறைவனை வணங்கிப் பதிகம் பாடினார். தொடர்ந்து அவ்விடத்தில் சில காலம் தங்கிப் பாடல்கள் பாடியும் உழவாரத் தொண்டு செய்தும் மகிழ்ந்தார்.

## இறைவனால் பொதிசோறு வழங்கப்பட்டது

தொடர்ந்து திருநாவுக்கரசர் நெடுந்தூரம் நடந்து திருப்பைஞ் ஞீலி என்னும் திருத்தலத்தை நாடினார். வெகுதூரம் நடந்த அப்பர் சோர்வுற்றதை இறைவன் நோக்கியதும் பாதையின் இடையில் ஒரு சோலையையும் அருகே ஒரு திருக்குளத்தையும் தோற்றுவித்தார். தாமும் முதிய வேதியரின் கோலத்தில் அங்கமெல்லாம் வெண்ணீறணிந்த பொலிவுடன் கையிற்பொதிசோற்றையும் வைத்திருந்தார். சோலையில் வந்து தங்கிய அப்பரின் அருகே சென்று நீர் வெகுதூரம் நடந்து பசியுற்றீர் இப்பொதி சோற்றை உண்டு பக்கத்திலுள்ள குளத்தில் நீர்பருகிச் செல்லலாம் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார். அப்பர் அப்பொதி சோற்றை உண்டபின் குளத்தில் நீர் பருகியதும் வேதியர் "நீர் எங்கே செல்கிறீர்?" என்று கேட்டார். அப்பர் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்வதாகக் கூறினார். வேதியர் தாமும் அங்கு செல்வதாகக் கூறி அழைத்துச் சென்று ஆலயத்தை அடைந்ததும் மறைந்தருளினார். இதைநோக்கிய அப்பர் தமக்குதவியது இறைவனே என வியந்து இறையருளை வேண்டிப் பாடினார். அவ்விடத்திலும் சில நாட்கள் தங்கி உளவாரப் பணியாற்றினார்.

திருநாவுக்கரசர் தம் இறைபணி நோக்கி மேலும் பல ஆலயங்களை வழிபட்டுப் பாடல்கள் பாடியும் தம் யாத்திரையைத் தொடர்ந்தார். இந்த யாத்திரை தொடர்ந்து தென்கயிலாயம் எனப் போற்றப்படும். திருக்காளத்தியில் வழிபட்டதும் வடகயிலையைத் தரிசிக்கவும் ஆவல் கொண்டார். இதனால் இவர் திருக்காளத்தி யிலிருந்து கல்லும் முள்ளும் செறிந்த மலைகள் மேடு பள்ளங் களையும் கடந்து வாரனாசி (காசி)யை அடைந்து சில நாட்கள் தங்கி இறைபணியாற்றினார். தாம் வடகயிலையைத் தரிசிப்பதன் பேரில் தம்முடன் வந்த அடியார்களை அவ்விடத்தில் விட்டுக் கங்கையோரமாகப் புறப்பட்டார்.

அப்பரின் அகத்திற்குடி கொண்ட சிவசிந்தனையின் தூண்டுதலால் தமது ஊன் உடலில் ஏற்படும் துயரங்களை நோக்காது காடுகளையும் அங்குள்ள கொடிய விலங்குகள், விசப் பாம்புகளையும் கருதாமல் கல்லும் முள்ளும் வருத்த இரவு பகலாக நடந்தார். கணுக்கால் வரை அங்கம் சிதைவடைந்த போது தமது கைகளாற் தாவிச் சென்றார். மணிக்கட்டுவரை சிதை வடைந்து இயலாமையால் மார்பினால் ஊர்ந்தார். இதனால் கால்கள் கைகள் மற்றும் மார்பும் என்புத்தசைகள் இயலாமையை உறுதி செய்தது. தமது இறுதிமூச்சுவரை கயிலை நாதரைத் தரிசிப்பதையே சிந்தையில் வைத்திருந்தார். இறைவன் அவ்விடத் தில் ஒரு குளத்தைத் தோற்றுவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் கயிலைப் பாதையைத் திசைதிருப்பியது

இறைவன் தவமுனிவரின் வேடத்தில் வந்து கயிலைக்குச் செல்லாது திரும்ப வற்புறுத்தி அப்பரின் சிவசிந்தனையை அளவிட்டார். அச்சமயம் அப்பர் முனிவரைக் கண்டதும் சிந்திக்கும் தென்பு வந்தது. அவர் முனிவரை நோக்கி "இவ்வுடல் நிலையற்றது கயிலைக் காட்சியைக் கண்டாலன்றி இந்த உடலுடன் திரும்ப மாட்டேன்" என்றார். இதைக் கேட்டதும் முனிவர் மறைந்தார். அசரீரி பின்வருமாறு ஒலித்தது. "ஓங்கும் நாவினுக்கரசனே எழுந்திரு" என்றதும் அப்பரின் உடல் பழுதின்றி முன்போல மாறியது. உடன் எழுந்த அப்பர் "அண்ணலே என்னை ஆண்டு கொண்டு விண்மறைந்து அருள் பாலிக்கும் வேதநாயகனே என் கண்ணினால் திருக்கயிலைக் காட்சியைக் காண அருளுவீர்" என்று பணிந்தார்.

## திருவையாற்றில் கயிலைக் காட்சியைத் தரிசித்தது

அடியார்கள் வேண்டுவதை ஈயும் பிரான் அருகேயுள்ள குளத்தில் மூழ்கித் திருவையாற்றை அடைந்து கயிலைக் காட்சி யைக் காண்பாயாக என அசரீரியாக ஒலித்தார். அத்திரு வாக்கைக் கேட்ட அப்பர் தலைமேற்கூப்பிய கரத்தினால் வணங்கிக் கொண்டு திருவைந்தெழுத்தை ஓதியவண்ணம் அப்பொய்கையில் மூழ் கினார். இறையருட் பேறாகத் திருவையாற்றருகேயுள்ள தாமரைத் தடாகத்திலிருந்து எழுந்தார். இறையருளை வியந்து "எம்பெரு மான் தந்த கருணை இதுவன்றோ என்றவாறு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். அப்படியே தடாகத்தைக் கடந்து சென்றதும் திருவை யாற்றிலுள்ள சராசரங்கள் யாவும் கயிலாய மலையையும் அங் குள்ள இயல்பான காட்சியாகவும் தோன்றின. ஆலயத்துட் சென்றார். யாவும் கயிலாயத்தின் அமைவாகவும் அரிபிரமேந் திராதி தேவர்கள் நந்தி மற்றும் முனிவர்கள் துதிபாடுவோர் போன்ற சகலகாட்சிகளும் அமைந்திருந்தன. அப்பர் அக்காட்சிகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்குளிரக் கண்டு கயிலாயநாதனையும் உமையவளையும் உளமார வழிபட்டு மகிழ்ந்தார். தமது ஆவல் தீரப்பாடியும் ஆடியும் அழுதும் போற்றித்திருத்தாண்டகம் பாடியும் இறைஞ்சினார். இவர் தம்மை மறந்து இன்புற்ற வேளை இறைவனருளால் கயிலைக் காட்சியும் மறைந்தது.

காட்சிகள் மறைந்ததும் திருவையாறு ஆலயச் சூழலில் இறைவனை அலங்கரித்து "மாதப் பிறைக்கன்னியானை" என்று தொடங்கும் பதிகமும் மேலும் பல பாடல்களையும் பாடி இறை யருளை வியந்தார். உழவாரப் பணியாற்றிச்சில தலச்சுற்றுலாவில் புறப்பட்டார்.

"மாதர் பிறைக்கண்ணியானை" என்னும் திருப்பதிகம் நாலாம் திருமுறையில் அமைந்துள்ளது.

நாலாம் திருமுறை திருவையாறு பண் : காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

1. **மாதர்ப் பிறைக் கண்ணி யானை**
**மலையான் மகளொடும் பாடிப்**
**போதொடு நீர்சுமந்து ஏத்திப்**
**புகுவார் அவர்பின் புகுவேன்**
**யாதும் சுவடு படாமல்**
**ஐயாறு அடைகின்ற போது**
**காதல் மடப்பிடி யோடும்**
**களிறு வருவன கண்டேன்**
**கண்டேன் அவர் திருப்பாதம்**
**கண்டறி யாதன கண்டேன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. போழிளங் கண்ணியி னானைப்
பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் போற்றிஎன் றேத்தி
வட்டமிட்டு ஆடா வருவேன்
ஆழிவலவன் நின்று ஏத்தும்
ஐயாறு அடைகின்ற போது
கோழிபெடை யொடும் கூடிக்
குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

3. எரிப்பிறைக் கண்ணி யினானை
ஏந்திழை யாளொடும் பாடி
முரித்த இலயங்கள் இட்டு
முகமலர்ந்து ஆடா வருவேன்
அரித்தொழு கும்வெள் ளருவி
ஐயாறு அடைகின்ற போது
வரிக்குயில் பெடையொடு ஆடி
வைகி வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

4. பிறையிளம் கண்ணியி னானைப்
பெய்வளை யாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித்
தோளைக் குளிரத் தொழுவேன்
அறையிளம் பூங்குயி லாலும்
ஐயாறு அடைகின்ற போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையிளம் பேடையொடு ஆடிச்
சேவல் வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

5. ஏடுமதிக் கண்ணி யானை
ஏந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையும்
கைதொழுது ஆடா வருவேன்
ஆடல் அமர்ந்துறை கின்ற
ஐயாறு அடைகின்ற போது
பேடை மயிலொடும் கூடிப்
பிணைந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

6. தண்மதிக் கண்ணியி னானைத்
தையல்நல் லாளொடும் பாடி
உண்மெலி சிந்தைய னாகி
உணரா உருகா வருவேன்
அண்ணல் அமர்ந்துறை கின்ற
ஐயாறு அடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொடு ஆடி
வைகி வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கடிமதிக் கண்ணியி லானைக்
காரிகை யாளொடும் பாடி
வடிவொடு வண்ணம் இரண்டும்
வாய் வேண்டுவ சொல்லி வாழ்வேன்
அடியிணை ஆர்க்கும் கழலான்
ஐயாறு அடைகின்ற போது
இடிகுரல் அன்னதோர் ஏனம்
இசைந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

8. விரும்பு மதிக்கண்ணி யானை
மெல்லிய லாளொடும் பாடிப்
பெரும்புலர் காலை எழுந்து
பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்தும்
ஐயாறு அடைகின்ற போது
கருங்கலை பேடையொடு ஆடிக்
கலந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

9. முற்பிறைக் கண்ணியி னானை
மொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிற்றுக் கில்லேன்
பாடியும் ஆடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் றாரோடு
ஐயாறு அடைகின்ற போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றுணைப் பேடையொடு ஆடி
நாரை வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

10. திங்கள் மதிக் கண்ணி யானைத்
தேமொழி யாளொடும் பாடி
எங்கருள் நல்கும்கொல் எந்தை
எனக்கினி என்னா வருவேன்
அங்கிள மங்கையர் ஆடும்
ஐயாறு அடைகின்ற போது
பைங்கிளி பேடையொடு ஆடிப்
பறந்து வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

11. வளர்மதிக் கண்ணியி னானை
வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததொர் காலம்
காண்பான் கடைக்கண் நிற்கின்றேன்
அளவு படாததொர் அன்பொடு
ஐயாறு அடைகின்ற போது
இளமண நாகு தழுவி
ஏறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறி யாதனக் கண்டேன்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பூம்புகலூரில் துறவு நிலையை உறுதிப்படுத்தியது

திருநாவுக்கரசர் இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்டதும் இறை புகழ் பாடிப் பணியவும் ஆலய வீதிகளில் உழவாரப் பணியையும் நியதியாகக் கொண்டு முதுமையிலும் தமது வாய்மையை நிலைநிறுத்தினார். தமது திருத்தலச் சுற்றுலாவில் எண்ணிறைந்த ஆலய தரிசனையின் நிறைவில் திருப்புகலூரைச் சென்றடைந்தார்.

எண்பது வயதெல்லை தாண்டினாலும் நிதான புத்தியும் வாய்மையும் அகம் நிறைந்த சிவசிந்தனையும் மிக்கவர். எங் கெல்லாம் சென்றாலும் தம்மைத் தடுத்தாட்கொண்ட திருவதிகை வீரட்டானேசுரரையும் பல அற்புதங்களை உணர வைத்த திருவா வூரையும் சிந்தையுள் நிறைத்து வைத்திருந்தார். அப்பரின் உலகப் பற்றற்ற நிலை மண், பொன், பெண் ஆசையைத் துறந்த ஒரு சைவ ஆசாரம் பேணுபவர் எவ்வாறு வாழ வேண்டு மென உலகறியச் செய்ய வேண்டுமென இறைவன் திருவுளங் கொண்டார்.

திருப்புகலூரை வந்தடைந்த அப்பர் எம்பெருமானை வணங்கியதும் பாடும் பணியுடன் தமது உழவாரப் பணியிலும் இணைந்தார். வீதியிலுள்ள புல் பூண்டுகளுள் மறைந்த நிலையில் பொன்னும் நவமணிகளும் கற்கள், மணலினூடே ஆங்காங்கே பரவியிருந்தன. தமக்கெனக் குடும்பம், உற்றார், உறவினர் என எவரும் இல்லாத முதிய நிலையில் தமக்கென எவையும் தேவையற்றவருக்கு வேண்டிய ஆகாரத்தைச் சிவனடியார்கள் வழங்க உண்டு சிவத்தின் இன்பநிலையில் இருந்தவர் அப்பர் பெருமான். எது வந்தாலும் ஓடும் செம்பொன்னும் ஒப்ப நோக்கி யவர். திருவைந்தெழுத்தை ஓதிய வண்ணம் தென்பட்ட பொன், மணிகள் யாவற்றையும் தமது கைபடாது உழவாரத்தால் ஏந்திக் குளத்தில் வீசினார். இறைவனின் முதலாவது பரிசோதனை நிறைவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இவரின் பெண்ணாசையற்ற செயலை நிரூபிக்க எண்ணிய இறைவன் சித்தப்படி தேவலோகத்து ஆடலரசிகள் அப்பர் பெருமானின் முன்வந்து ஆடியும் பாடியும் தமது மையல் வண்ணத்தால் மயக்க எத்தனித்தனர். சிவனருளையே சிந்தித்து இறைபணியில் இணைந்த அப்பர் பெருமான் எதுவித சலனமுமற்ற நிலையில் தம்பணியில் இருந்தார். அவர்களின் மையல் விளையாட்டு மேலோங்கியது. அப்பர் பெருமான் அவர்களை நோக்கி சிவசிந்தனையில் திருவாரூர் அப்பனுக்கே ஆளானேன். வேறு எதனையும் நாடேன். உம்மால் என்னைச் சிவ சிந்தனை யிலிருந்து விடுவிக்க முடியாது. அவ்வாறு முனையின் கெடுவீர்கள் என்னும் சிந்தனையில் "பொய்ம் மாயப் பெருங் கடலுள்" என்னும் திருத்தாண்டகம் பாடினார். அவர்கள் தமது எண்ணம் நிறை வேறாததால் அப்பரை வணங்கிவிட்டுச் சென்றனர். அப்பர் பாடிய திருத்தாண்டகம் ஆறாம் திருமுறையில் அமைந்துள்ளது. அதனை யும் அறிவோம்.

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

1. பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பாநின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவீர்காள் இடறேன் மின்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற்
றொருவீர்வேண் டீரீண்டிவ் வவனி யெல்லாம்
உம்பரமே உம்வசமே யாக்க வல்லீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
உம்பருமா யூழியுமா யுலகே ழாகி
ஒள்ளாரூர் நள்ளமிர்தாம் வள்ளல் வானோர்
தம்பெருமா னாய்நின்ற அரனைக் காண்பேன்
தடைப்படுவே னாக்கருதித் தருக்கேன்மின்னே

3. சில்லுருவிற் குறியிருத்தி நித்தல் பற்றிச்
செழுங்கணால் நோக்குமிது வூக்கமன்று
பல்லுருவில் தொழில்பூண்ட பஞ்சபூதப்
பளகீரும் வசமன்றே பாரே லெல்லாம்
சொல்லுருவிற் சுடர்மூன்றாய் உருவம் மூன்றாய்த்
தூநயனம் மூன்றாகி ஆண்ட ஆரூர்
நல்லுருவிற் சிவனடியே யடைவேன் நும்பால்
நமைப்புண்ணேன் கமைத்துநீர் நடமின்களே

4. உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே யானேல் வானோர்
பொன்னுருவைத் தென்னாரூர் மன்னு குன்றைப்
புவிக்கெழிலாஞ் சிவக்கொழுந்தைப் புகுந்தென் சிந்தை
தன்னுருவைத் தந்தவனை யெந்தை தன்னைத்
தலைப்படுவேன் துலைப் படுப்பான் தருக்கேன் மின்னே

5. துப்பினைமுன் பற்றறா விறலே மிக்க
சோர்வுபடு சூட்சியமே சுகமே நீங்கள்
ஒப்பினையைப் பாவித்திவ் வுலக மெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதேயென்றன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பினைப்பொன் மதிலாரூர் மணியை வைகல்
மணாளனையெம் பெருமானை வானோர் தங்கள்
அப்பனைச்செப் பிடவடைவேன் நும்மால் நானும்
ஆட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே.

6. பொங்குமத மானமே ஆர்வச் செற்றக்
குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள்பெரு மாநிலத்தி னெல்லை யெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதே யானேல்
அங்கமலத் தயனொடுமா லாகி மற்று
மதற்கப்பா லொன்றாகி யறிய வொண்ணாச்
செங்கனகத் தனிக்குன்றைச் சிவனே யாரூர்ச்
செல்வனைச்சேர் வேன்நும்மாற் செலுத்துணேனே.

7. இடர்பாவ மெனமிக்க துக்க வேட்கை
வெறுப்பேயென் றனைவீரும் உலகை யோடிக்
குடைகின்றீர்க் குலகங்கள் குலுங்கி நுங்கள்
குறிநின்ற தமையாதே யானேல் வானோர்
அடையார்தம் புரமூன்று மெரிசெய் தானை
அமரர்கள் பெருமானை யரனை ஆரூர்
உடையானைக் கடுகச்சென் றடைவேன் நும்மா
லாட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே.

8. விரைந்தாளும் நல்குரவே செல்வே பொல்லா
வெகுட்சியே மகிழ்ச்சியே வெறுப்பே நீங்கள்
நிரைந்தோடி மாநிலத்தை யரித்துத் தின்பீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
கரைந்தோட வருநஞ்சை யமுதுசெய்த
கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவாரூரில்
பரஞ்சோதி தனைக்காண்பேன் பாடேன் நும்பண்பிற்
பரிந்தோடி யோட்டந்து பகட்டன் மின்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மூள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாண் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்ம ராணை
நடாத்துகின்றீர்க் கமையாதே யானேல் வானோர்
நீள்வான் முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன் நும்மா
லாட்டுணே னோட்டந்தீங் கலையேன் மின்னே.

10. சுருக்கமொடு பெருக்கநிலை நித்தல் பற்றித்
துப்பறையென் றனைவீரிவ் வுலகை யோடிச்
செருக்கிமிகை செலுத்தியும் செய்கை வைகல்
செய்கின்றீர்க் கமையாதே யானேன் மிக்க
தருக்கிமிக வரையெடுத்த அரக்கன் ஆகந்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல் கேட்டு
இரக்கமெழுந் தருளியஎம் பெருமான் பாதத்
திடையிலேன் கெடுவீர்கள் இடறேன் மின்னே.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசரின் இயல்பு நிலையும் முத்திப்பேறும்

முற்றவப் பயனுக்கேற்ப நல்ல சைவப்பண்பின் புகலிட மான பெற்றோரால் கல்வியுடன் பண்பையும் ஊட்டப்பட்டு பெற்றோரின் மறைவால் உலக நிலையாமையை உணர்ந்து அறப்பணியாற்றியவர். கொல்லாமை என்னும் சிறப்பிற்காகச் சமண சமயத்தை நாடினாலும் மேலும் கற்றறிந்து சமண சமயத்தில் உயர் பதவியை நீடிய காலம் வகித்தார். முதுமை யடைந்த சகோதரியின் வேண்டுதலும் இவரின் முற் காலப்பாவ விமோசனமும் கைகூட இறைவனால் சூலைநோய் கொடுத்து தடுத்தாட்கொள்ளப்பட்டவர். இறைவன் அப்பரின் அகவை எழுபது கடந்த நிலையிற் தடுத்தாட்கொள்தலைப் பாடி சைவ உலகை உய்ய வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகுறிப்பு :-

அப்பர் சுவாமிகள் இறைவனாற் தடுத்தாட்கொள்ளப்பட்டதும் முற்றுமுணர்ந்து இறை பணியாகப் பாடற்பணியையும் உழவாரத் தொண்டினையும் விருப்புடன் செய்தவர். தமது 81 அகவையின் காலத்தில் பிற்காலத்தை சிவப்பணியாகச் செய்ததால் தமது மறைவுக் காலத்தையும் கண்டறிந்தார்.

திருவாரூர் இறைவனை இதயத்தில் ஆழப் பதிய வைத்தவர். திருப்புகலூரில் நிறைவுப்பணியாற்றியவர். இறுதிக் காலத்தில் இவரின் பெருமை பற்றற்ற துறவியாக அமைய வேண்டி நடாத்தப்பெற்ற சோதனை யிலும் தம்மை வெளிப்படுத்தியவர்.

தம்மைப் பல சிறப்புகளுக்கும் அருள்பாலித்த திருப் புகலூர் இறைவனை வேண்டினார். அன்றைய தினம் சித்திரை மாதம் சதய நட்சத்திரத்திதி இவரின் 81ஆம் அகவையில் கைகூடிய வேளை இறைவனை வேண்டி "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ" என்ற தொடரில் திருத்தாண்டகப் பதிகம் பாடி பாடலின் இறுதியில் "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று பாடலை நிறைவு செய்ததும் ஞான வடிவாகி ஈசனின் ஞானத்திருவடியில் ஐக்கிய மாகி முத்தியடைந்தார்.

அப்பர் பெருமான் தமது முத்தியை நாடுமுன் பாடிய நிறைவுப் பாடல் ஆறாம் திருமுறையில் நிறைவுப் பதிகமாக அமைந்ததையும் அறிவோம்.

திருச்சிற்றம்பலம்

1. **எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ**
**எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்**
**கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்**
**கழலடியே கைதொழுது காணின் அல்லால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

2. அங்கமே பூண்டாய் அனலாடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவாமூவாச்
சிங்கமே உன்னடிக்கேபோ துகின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவதேவே.

3. பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேல் தரவறுத்தாய்
அவர் வேண்டுங் காரியமிங் காவதில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

4. தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலை வளைத்துச் செங்கணையாற் செற்றதேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர் மேலான் நீர் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நீரேறு செஞ்சடைமேல் நிலா வெண்டிங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டனங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

6. விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவதேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தாயென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

7. தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடி மேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப்பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

8. நெய்யாடி நின்மலனே நீலகண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதியானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

9. துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைத்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மையானே
அன்னநடை மடவாள் பாகத்தானே
யக்காரம் பூண்டானே ஆதியானே
பொன்னங் கழலடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

10. ஒருவரையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாறத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவ வறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர் மீதோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

செந்தமிழ் மொழியின் தொன்மையும் சைவ சமயத்தின் மேன்மையும் நாட்டில் நலிவுற்ற வேளை யாவற்றையும் போற்றி வளர்க்க வல்ல சமய குரவர்களைத் தோற்றுவிக்கவென இறைவன் செய்த திருவிளையாடலில் திருநாவுக்கரசரின் அவதாரம் முதலாவதாகும். நாலு பேர் சொற்கேட்டால் யாவும் சித்தியாகும் என்னும் முதுமொழி கூறுவது போல இறைவன் நான்கு சமய குரவர்களை அவதரிக்கச் சித்தங் கொண்டார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவது சகல உயிர்களுக்கும் உரிய தாகும். நன்கு பக்குவ நிலை கொண்ட முனிவரின் சிறு தவறு மேலும் பிறவி எடுத்து நல்லறம் பேணி நற்கதியடையும் பேற்றினை இறைவன் முனிவருக்கு வழங்கினார். இதன் பேறாக நற்குடியிற் பிறந்து நல்லறம் பேணி யாவற்றையும் விடுத்து பாழும் சமண சமயத்தில் (முன் செய்த பிழையின் தண்டனைக்காக) நெடுங்காலம் உள்வாங்கப்பட்டார். இதே சமயம் பெற்றோருமற்ற சகோதரி திலகவதியார் தமது நல்வினைப் பயனாக சிவப்பணி போற்றிய சிந்தனையில் தமது தம்பி முத்தியின்பம் பெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்தார். முதுமையில் சிவநெறி உய்ய வழிகாட்டுவதை விரும்பிய இறைவன் தமது பக்தையின் வேண்டு தலுக்காக திருநாவுக்கரசரைச் சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டார்.

முன்செய்த தீவினைப் பயனின் அடிச்சுவடு இவருக்கு மேலும் பல தீங்குகளைச் செய்தது. எம்பெருமானின் திருவடி நிழல் அவரை உய்வித்தது. நிறைவில் கல்லில் கட்டிக் கடலிலிட்டபோது நமசிவாய என்னும் திருமந்திரம் கல்லையே தெப்பமாகப் பயன்படுத்தி நற்கரை சேர்ந்தார். இறை வணக்கத்தில் தமது சமண அழுக்கு நீங்க இறைவனால் முத்திரை அடை யாளமிடப்பட்டு திருவடி தீட்சை பெற்றார். தமிழகத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலநூறு சிவாலயங்களைத் தரிசித்து உழவாரத் தொண்டு செய்து நாவால் பதிகங்கள் பாடி நாவுக்கரசரென இறைவனாற் போற்றப் பட்டார்.

தமதுள்ளத்திலே இறைவனை இருத்தி இறைவனின் சித்தப்படி சிவாலய தரிசனையில் நாட்டங் கொண்டு தன் இப்பிறவியில் கயிலை நாதனை நேரிற் சென்று தரிசிக்க முயன்றார். எண்பது வயதான முதிர்வில் தம்மை மறந்து இறைவனை எண்ணிப் பயணமானவர். இடை வழியில் உடல் நிலை நலிவடைந்து இயக்கமற்ற நிலையில் தமது கயிலைப் பயணத்தை நிறைவு செய்வதையே மூச்சாகக் கொண்டார். இவரின் தூய சிந்தனைக்காக இறைவன் திருவையாறில் இவருக்காகக் கயிலைக் காட்சியைக் காண்பித்தார். திருநாவுக்கரசரின் பக்தியும் தூய சிந்தனை யும் கயிலைக்காட்சி பெரும்பேறாக அமைந்தது.

81ஆம் வயதிலும் இவரின் மண், பொன், பெண் ஆசை இல்லை யென்பதை இறைவன் இம்மண்ணிலுள்ளோருக்கு அறிய வைத்தார். முக்காலத்தையும் உணர்ந்த சிவசிந்தனையால் சித்திரை மாத சதய நட்சத்திரத்தன்று இறைவனடியை நாடி "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ" என்ற தொடரின் மனித வாழ்வினதும் சிவனாரின் சித்தமமைந்த தத்துவங்களையும் போற்றும் திருத்தாண்டகப் பதிகம் பாடியதும் பரகதியடைந்தார்.


திருநாவுக்கரசரின் சிவநெறி பூண்ட வாழ்க்கை மனித குலத்தின் சைவப்பண்பாட்டையும் கடமைகளையும் மேம்பட அருளியது இறைவனின் திருவருளேயாகும்.

**யாவும் சிவமயமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.



குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியில் பால்வெண் ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம்



சுடர்நிலை, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org